**KALANILAYAM** தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்

V7. No. 18. 3.5.1934.

199168

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

# கலாநிலையம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 7.] 1934 ஆ மே மீ 3உ [No. 18

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 273
2. தமிழ்ப் பாடம் — வில்லிபாரதம்—கிருஷ்ணன் தூதுச் சருக்கம் 275
3. இரவீந்திரநாதர் கட்டுரைகள்-(ராஜாராம்மோகன் ராய்) W.E. அரியநாயகம். B.A; B.D; B.Ed & ஆஷாதேவி. M.A. 277
4. கம்பராமாயணம்—(நட்புப் படலம்) T. N. சேஷாசலம் B.A.B.L. 279
5. மதுரைக்கோவை (ஒருவழித் தணத்தல்) S. வையாபுரிப்பிள்ளை, B.A. B.L. 282
6. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 2 களம் 1.) Goldsmith's—"She stoops to Conquer" 284
7. நம்மாழ்வார் வைபவம் (6-ம் பத்து, 6-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A. B.L. 286
8. வர்த்தமானம் 288

## கலாநிலையம்

### சுய கல்சர் 1.

கல்சரின் அவசியத்தை நான்குவாரத் தலையங்கங்களில் காட்டினோம். அதன்பின் ஆறு தலையங்கங்களில், கல்சர்நிலை அடைவதற்கு ஆதாரமாகின்ற கவிதையின் தன்மையும், அக் கவிதை ஒருவர் மனத்தினின்று பிறக்குமாறும், பிறந்து மற்றவர் மனத்தைச் சேருமாறும், சேர்ந்தவர்மனத்தைத் தன்மயமாக்கிக் கொள்கின்றவாறும் வகுத்துரைக்கப்பெற்றன. இவைகளில், கடவுள் கருத்திற்கும் கல்சர்நிலைக்கும், கல்சர்நிலைக்கும் கவிதாசக்திக்கும், மற்றக் கவிதாசக்திக்கும் கடவுள்கருத்திற்கும், முறையே உளவாகும் உறவினையும், அவைகளினூடுருவிப்பிணைக்கும் தத்துவத்தையும் செப்பலுற்றோம். இவைகளெல்லாம் பொதுவகையில் பொருந்தத்தக்கன. இதன்மேல், இவ்விதம் பொதுவுறப்புகன்ற நிரந்தர வாய்மைகளையே அடிப்படையாகக்கொண்டு நம்மனோர் தனித்தனி இக்கல்சரையெய்தும் நீர்மையும், எய்திவரும் ஒருகல்சரை அளந்துகொள்ளும் வகையினையும், அதனுன் அவ்வவர்க்கேயன்றியாவர்க்குமே உடைமையாகின்ற அறிவு இன்பம் அன்பு நலங்களின் நேர்மையையும், எடுத்துரைக்க வேண்டியவர்களாயிருக்கின்றோம். இதுவே இங்குச் சுய கல்சர் என்று அழைக்கப்படுகின்றது. தர்மசிந்தனை, தெய்வபக்தி, புத்திவிசாலம், மனைவாழ்க்கை குடிவாழ்க்கை முதலியவைகளின் அமைதி, என்னுமிவ்வகை அம்சங்களால் நிறைந்து பூரணமாகின்றபேற்றினை நாடி ஆன்மாவானது நாளுக்குநாள் வளர்வதற்கேற்ற முறைகள், அவரவர் தனித்தனி தொடர்கின்ற சுயகல்சர் நெறியினிற்கு ஏற்றவாகும்.

இக் காலம் எங்கெங்கும் பற்பலர் பலப்பல விதங்களில்முயன்று தங்கள் நிலைமைநேர்மையும்மேன்மையும் அடையவேண்டுமெனமிகவருந்தியும் அந்தத்தில் ஒருவர்நிலையும் நேராகாததுகண்டு கையற்றுத்திகைக்கலாவது உலகறிந்ததோர் விடயமாம். இன்னபடிமுடிவதுவிபரீதமன்று. வித்தொன்றுபோடத் தருவொன்றுவிளையாதெனும் நியாயத்திற்கு இணங்கியேஇவ்வாறுஎல்லோர்முயற்சியும் முடிகின்றதென்பது சிறிதுஊன்றி நோக்கினால் தெரியவரும்! அவரவர் தங்கள்தங்கள் தன்மைக்குஏற்ற நிலையை அடைவார்களேயன்றி, புகுத்தப்படுகின்ற நிலைமைக்குரிய தன்மையராகமாட்டார். ஒருவன் அடைந்துள்ள சுகம்துக்கம் என்னும் நிலைகள் அவனது அந்தரங்கத் தன்மையின் தோற்றங்கள்; அல்லது காரியங்களென்றுங் கூறலாம். எனின் இந்நிலைகளையும், அந்நிலைகளுக்குரிய புறச்சாதனங்களையும் பற்றி விவகரிப்பதால் ஏது பயன்! மாசுபடிந்த தன் முகத்தைக் கண்ணாடியிற் பார்த்தவனொருவன் முகத்தைத் துடைத்துக்கொள்ளாமல் அக்கண்ணாடியைக் கைவருந்தத் துளக்கித்துளக்கித் தன் முகத்தினதழுக்குத் தீர்ந்ததோவென வினவுவது போலவேயாம் மக்கள் நிலையினைச் சீர்திருத்தச் செய்யுங் கருமங்கள் யாவும். வாய்மை மற்றுயாதெனின்—மக்கள் தங்கள் நிலைமை நேர்மையும் நன்மையும் அடையவேண்டுமென்னுங் கருத்தை நீக்கித் தாங்களே நேர்மையுடையவர்களாய் நல்லவர்களாய் உயர்வதற்குரிய நினைவும் முயற்சியும் நண்ணுவதன்றோ உண்மைமுறை. பொதுஜன முன்னேற்றத் துறைகளில் ஊடாடுவோரில் ஒரு சிறுபகுதியோர்க்கெனினும் இவ்வுண்மை தெரிந்திருந்திருக்கலாம். எனினும், தெரிந்தபடி அம்முறைகளைக்

கையாள்வாரைக் கணக்கெண்ண நம் ஒருகை விரல்களே மிகையாயிருக்கின்றன என்பதே குறை.

ஆதலின், செல்வம் செல்வாக்காதிகளின் மிகுதியும் குறைவும் பற்றித் தங்களுடைய நிலைமைஎதுவேயாயினும், அதனைத் தாம் ஒரு சிறிதும் கருதாமல், தங்களைப்பற்றியே தங்களுக்காகவே நினைத்துக் கல்சரைக் கல்சருக்காகவேமுழுமனதுடன்ஏற்று விவகரித்தல்வேண்டும்என்ற விப்பொருளில் சுயகல்சர்என்னுந்தொடர் பொருத்தமுடையதாகின்றது. சுயராஜ்யம், சுயநயம் என்னுந் தொடர்களிற்போல் 'சுய' என்னுஞ் சொல், மற்றவர்களிடமிருந்து ஒன்றை நாம், நமதுஉரிமை என்றஎண்ணத்திலோ,பேரவாவினாலோ அடையவேண்டும் என்னும் கருத்தை இச் 'சுயகல்சர்' என்னுந் தொடரில் குறித்து நிற்கவில்லை யென்பது வெளிப்படை. மாந்தருக்குஉரிய உள்ளம் புறம் என்ற ஈரிடத்தினுள் புறநிலைநேர்மை என்பதொன்று இருக்கின்றதென்பதைப்பற்றியே நினைக்காமல், உள்ளத்தின் தன்மையைச் சார்ந்திருக்கும் விடயங்களைக் கூறுகின்ற குறிப்பினையே 'சுய' என்னுஞ்சொல் கல்சரோடு சேர்ந்திங்குப் பெறலாகின்றது.

நம்முடைய நிலைமையைத் திருத்திக்கொள்ளலாமென்பதெல்லாம் வீண். அதுவோ நம் முயற்சியாலே முடியக்கூடிய தொன்றன்று. பெரும்பான்மை அது மற்றவர்கள் செய்கையினும்பொருந்தியதாயிருக்கின்றது.ஒருவன்தேடியபொருளெல்லாம்கள்வரால்இழக்கப்பெறலாம்; கட்டிய வீடுஅயலான் வைத்த தீயிற்கு இரையாகலாம்; பெற்றதோர் உத்தியோகம் பிறனொருவன் பொறாமைச் சூழ்ச்சியால் போகலாம். மற்று நம்மையே திருத்திக்கொள்ளும்'சுயகல்சரோ' நம்மையே சார்ந்தது.அந்தநேர்மையின் நன்மையோ, வெள்ளத்தால்வெந்தணலால்கள்வரால் அழியக்கூடியதன்று. இந்நேர்மை காத்தற்கெளியதாவதுபோன்றே ஈட்டுதற்கும் எளியதொன் றென்பதில் முழுநம்பிக்கைவைத்து நம்முழு முயற்சியனைத்தையு மதன்பால் செலுத்துதல் வேண்டும். சுயகல்சர் என்பது எவ்வெவர்க்கும் கைகூடிப் பயனளிக்கக் காத்திருக்கின்றது. கனவுஅன்று அது. மானுட இயற்கையிலேயே ஊன்றிய வேர்களை உடையது சுயகல்சர். களைகட்டு நீர்பாய்ச்சி வளர்ப்பதொன்றே வேண்டும்.ஆன்மாவிற்கு உரியதாகிய இருவித சக்திகள் சுயகல்சரைச் சாத்தியமாக்குகின்றன. ஒன்று சுய ஆராய்ச்சி, மற்றது சுய வளர்ச்சி. இவ் வான்மசக்திகளை மனத்தின் செய்கைகளாக வைத்துக் கருதினாலும் இவைகளின் நன்மைகளை உணருவோம். உலகப் பொருள்களையெல்லாம் ஆராய்ந்துகொள்கின்ற கருவியாயமைந்த நம் மனம், வேண்டுமெனின் தன்னையே தான் ஆராயவுங் கூடும். இம்மனம், தன்பால் முன் நிகழ்ந்துகழிந்தனவற்றை நினைத்துப்பார்த்தும் தற்காலம்நிகழ்வனவற்றைக் கவனித்திருந்தும், தான் வயமாவது இன்னவற்றிற்கென்றும் தன்னாலாற்றவல்லது இன்னதென்றும் தேர்ந்துகொண்டும், தான் பொறுப்பதும் தளர்வதும்களிப்பதும் தன்னாலாற்றவல்லது இன்னதென்றும் தேர்ந்துகொண்டும், தான் பொறுப்பதும் தளர்வதும்களிப்பதும் கவல்வதும் எவ்வெவற்றின்பால் நேர்கின்றன என்பதை உணர்ந்தும் தன்னைத்தா னாராயுமாற்றால், பொதுவாகத் தன் தன்மை இன்னதென்றும் தான் இருப்பது எதற்காக வென்பதையும் துணித்தறியலாகின்றது.இவ்வகையில்ஒருவன் தான்எத்தன்மையனாயிருக்கின்றான் என்பது தெரிந்துகொள்வது மல்லாமல், இன்னுந்தான்எத்தன்மையனாகக்கூடுமென்பதை யோசித்துக்கொள்ளக்கூடியவனு மாகின்றான். இந்தச் சக்தியால்நாம் நமதுள்ளத்தில் பற்றியுளவித்தின் தன்மையை விளங்கக்கண்டு அது எல்லையின்றி வளர்ந்து ஓங்கவல்லதெனும் உண்மையை ஓர்கின்றோம். நாம் பெற்றுள நலங்களைக்கொண்டு பூரணச் செம்மையை அடையவேண்டுமெனும் நோக்கத்தில் நிலைத்தவ ராகின்றோம். முன்குறித்த சுய ஆராய்ச்சியும் அதனால் எய்தும் இந் நிலைத்தநோக்கமும்இல்லையெனில் சுயகல்சர் என்பதும் இல்லை. இதனையே மெய்யறிவுடைய பெரியோர்ஆன்மவிசாரணை என்பர். இதுஇன்றி நாம்செய்வதற்குள்ள கருமங்கள்இன்னவையென்று தெரிவது எங்ஙனம்! தன்னுள்ளே தான் நுழைந்து தன்னையே ஆய்ந்தறிய வேண்டுமென்னும் நினைவுடையாரை இந் நாளுலகத்தில் சந்திப்பது அருமையாயிருக்கின்றது. ஆதலாற்றான், வேறு எத்தனைஎத்தனையோ பேசினோரும் பேசுவோரும்உளராயினும் நம்முடைய நன்மைக்குச்சுயகல்சர்அவசியமென்றுசொல்வாரைக்காண்பதற்கியலவில்லை. மாந்தரிற் பெரும்பாலோர்க்குத் தம் வெளிவாழ்க்கையோடு உள்ளத்தின் செய்தியை ஒப்புநோக்குங்கால் இப்பின்னது தங்களுக்கே மெய்ம்மையற்றவோர் அந்தகாரப் பெருவெளியாய்த் தோற்றுகின்றது. ஆசாபாசங்களால் ஒவ்வோர் சமயம் தமது மனம் அலைப்புண்டதை நினைக்கலாயினும் ஆகலாமேயன்றித் தங்கள் மனத்திற்கு ஓர் திப்பிய சக்தி யுண்டென்று அவர் சிந்தித்ததுமில்லை. இவ்வகையில், மக்களில் எண்ணிறந்தோர் தங்களுக்குத் தாமே அன்னியர்களாய்க் கடவநாள் கழிக்க நேர்கின்றனர். மனத்திற்கோர் ஒப்புயர்வற்ற சக்தி யுளதென்று சிற்சிலர் செவியில் பட்டிருக்கலாம். ஆனால், கையின் சக்தியும் வாயின் சக்தியும் வற்புறுத்தப்பெற்று, அக்கைக்குக் கூலியும் வாய்க்குச் சோறும் வாங்கித்தருகின்றேன் என்னும் முன்னேற்றமுறைப்பாடுகளிடையே காதிற்பட்டது கருத்தளவு எட்டுதற்கு இடமில்லாமற்போகின்றது. உபயோகப்படுத்தினும் படுத்திக்கொள்ளாவிடினும், தன்னையே ஆராய்ந்துகொள்கின்ற சக்தியொன்று மனத்திற் கிருப்பது நிச்சயம். ஆகையாற்றான் வேண்டுமெனின் யாவருக்கும் சுயகல்சர் சாத்தியமாகும் என்று கூறினோம்.

இதுவுமன்றி, நமக்கு இதனினும் மேன்மையான சக்தியொன்றுளது. அது, நம்மையே நாம் நியதிக்கு உட்படுத்தி நடத்திக்கொள்ளுமாற்றால் நமக்கோர் நிலையாய உருவத்தைத் தந்துகொள்ளல். இந்தச் சக்தியைச் செம்மையாக உபயோகித்தால் அதன் மகத்துவத்திற்களவில்லை; அதனையேநெறிபிறழ்ந்து கையாண்டால் அதனினும் பயங்கரமானதுமில்லை. ஏனெனில், இச்சக்தியிருப்பதாற்றான் நம்முடையகருமங்களுக்கு நாம் அதிகாரிகளாகின்றோம். மானுடப் பொறுப்பிற்கெல்லாம் இதுவே நிலைக்களம். நம்முடைய சக்தி இன்னதென்று ஓர்வதும் அல்லாமல் அச்சக்தியைத் தூண்டி நடத்தவுங் கூடியவர்களா யிருக்கின்றோம். நம்முடைய உடைமைகளைக் காப்பதுமல்லாமல்ஆளவும் வல்லோம். நம்முடைய சக்திவளர்வதைக்கண்டிருப்பதுமன்றி அவ்வளர்ச்சிக்கு ஊ[illegible]வைகளைச் செய்யவும் இயலும். வெள்ளம்[illegible] எண்ணங்களை நாம் [illegible]

199168



தடுக்கவும் திருப்பவும் கூடும். உணரவேண்டிய விடயங்களில் நமது புத்தியைச் செலுத்தி நிறுத்தலாம். பூரணச்செம்மையில் நாட்டத்தை நிலைக்கவைத்து எல்லாம் அதன்பால் விரைந்தடையும்படி செய்யவும் இயன்றவராகி யிருக்கின்றோம். இதுவே நமது இயற்கைக்குரிய மேன்மை. இம்மேலாயஉரிமை நமக்கிருப்பது நிச்சயம். எனின் நம்முடைய புறவுலக நிலைமை யாவதாயின் என்! இக்காலம் புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கப்படுகின்றவிடயங்கள் எத்தனையோ, ஆயினும், தொன்மையான இவ்வுரிமை நமக்கிருக்கின்றதென்பதையும் அவ்வுரிமைக்கு ஆதாரமாகிய ஆன்மசக்தி நமக்கு இயற்கை என்பதையும், அவரவர் கண்டுபிடித்துக்கொள்வதே யாவற்றிலும் முதன்மையான அவசியமாகின்றது.

---

# தமிழ்ப்பாடம் 118.

## வில்லிபாரதம்—உத்தியோக பருவம்.

[261-வது பக்கத் தொடர்ச்சி]

### கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

**பா**ண்டவர்க் குரியபாகத்தைத் துரியோதனன் கொடுக்க மறுக்கவே, கண்ணபிரான், அன்னதிற் பாதியாகினும் கொடுப்பாய் என்று கேட்க, அவன் அதையும் மறுக்க, பின், கண்ணன் ஐந்தூர் தருமாறு கேட்கின்ற செய்யுளொன்று விடப்பட்டது.

மாட ளிக்குல நெருங்குபைந் துளப
மாலையாய் மகர வேலைசூழ்
நாட ளித்திட வுமைந்துபே ருடைய
நகரளித் திடவும் வேண்டுமோ
காட ளிக்க வதனிடை திரிந்துறை
கரந்து போயினர்கள் காணவோர்
வீட ளிக்கினும் வெறுப்பரோ விதனை
விடுகவென் றெதிர்வி ளம்பினான். 52

பதவுரை.

அளி - வண்டுகளினது, குலம் - கூட்டம், மாடு - பக்கத்தில், நெருங்கு - நெருங்கி மொய்க்கின்ற, பை - பசுமையான, துளபமாலையாய் - துளசி மாலையை அணிந்தவனே.

மகரம் - மகரமீன்களையுடைய, வேலை-கடல்,சூழ்-சூழ்ந்திருக்கின்ற, நாடு - நாட்டினை, அளித்திடவும்-கொடுக்கவும், (அல்லது)ஐந்து பேர் உடைய - ஐந்து பேருடைய, நகர்-நகரங்களை, அளித்திடவும்-கொடுக்கவும், வேண்டுமோ - வேண்டுமோ?

காடு-காட்டை, அளிக்க-ஆளும்படி நான்கொடுக்க, அதன் இடை - அந்தக் காட்டினிடத்தில், திரிந்து-அலைந்து, (பிறகு) உறை-வசிக்கின்ற இடமும்,கரந்து-தெரியாமல் ஒளித்துக்கொண்டு, போயினர்கள்-அஞ்ஞாதவாசம் செய்துபோனவர்கள், காண - கண்ணில் காண, ஓர் - அவ் வைவருக்கும் சேர்த்து ஒரு, வீடு அளிக்கினும் - வீட்டைக்கொடுத்தாலும், வெறுப்பரோ-இது போதாதென்று வெறுப்பார்களோ!

(ஆதலால்)இதனை விடுக—நான் கொடுப்பதுஎன்ற வார்த்தையை அறவே விட்டுவிடு, என்று - என்று, எதிர் விளம்பினான் - துரியோதனன் பதில் கூறினான்.

விரிவுரை:—ஆதலால் தருமன் மூன்றாந் தரமாகக் கேட்கும்படி சொன்ன ஐந்துவீடு கேட்பதற்கு இனியாதும் இடமில்லை. முன் 'ஈயிருக்கும் இடமேனும் தரேன்' என்ற சொல்லையே நிலைநாட்டினான் துரியோதனன். ஒருகால் தூதின்பகுதியாக, ஐந்து வீடுகளேனும் கொடுஎன்று கண்ணனேகேட்டிருந்தால்உடன் இருந்த சகுனி அதனைத் தந்துபோர் நோவண்ணம் [illegible]க்கொள்ளத் தன் மருகனுக்குப் புத்தி புகட்டியிருப்பினும் இருக்கலாம். சொல்லி அனுப்பியதை உரைக்கவேண்டுமென்பது ஒரு தூதனது முறைமை. அன்னபடி கண்ணனே ஐந்து இல்லம் கேளாமல் விட்டானேல் அவன் தூது பழுதுடையதாகும். ஆதலால் ஒருவீடும் கொடுக்கமாட்டேன் என்று துரியோதனன் தானாகவே இயம்பும்படிகவி இயற்றிவைத்தார். இதன்பின்ஐந்துவீடு கேட்க வேண்டுமென்பது மிகை.

இவ்வாறு துரியோதனன் மறுக்கவே, கிருஷ்ணன், ஒரு குலத்தில் பிறந்தோர்களுக்கு உரிய உரிமையைத் தருவதே, நீதியும் புகழும் ஆகும் என்று எடுத்துக்காட்டத் துரியோதன், 'குலமும் உரிமையும் நீதியும் எனக்கிங்கு இயம்பவேண்டா. பாண்டவர்கள் வீரர் ஆவரேல் என்னிடத்திலிருந்து வாங்கவேண்டிய வழியில் வாங்கிக்கொள்ளட்டும்' எனத் தருக்கினான்.இக் கருத்துகளைக் கொண்டுள மூன்று செய்யுள்கள் விடப்பட்டன.

---

பொய்வ ளர்ந்தமொழி மன்னன் மற்றிவை
புகன்ற பின்பு புயவலியினா
லைவர் தங்க ளரசுங் கொடாம லடலாண்
மைகொண் டெதிர டர்த்தியேல்
மெய்வி ளங்கவரு குருநிலத் தினிடை
வந்து வெஞ்சமர் விளைக்கவே
கைவ ழங்குகென நின்ற தாணிடை
யறைந்து ரைக்குமிவை காவலன். 53

போரே செய்வானாகில் அவ்வுறுதியிலிருந்தேனும் பின் பிறழாதபடி கையடித்துத் தருமாறு கிருஷ்ணன் கேட்கின்றான்.

பதவுரை.

பொய் - பொய்யானது, வளர்ந்த-வளர்கின்ற, மொழி-வார்த்தைகளைப் பேசுகின்ற, மன்னன் - துரியோதனன், (மற்று - அசை) இவை - இவ்வாறு, புகன்ற பின்பு - சொல்லிய பிறகு,

புயவலியினால் - புயவலியின் செருக்கினால், ஐவர் தங்கள் - பாண்டவர்களது, அரசும் - இராஜ்யத்தையும், கொடாமல் - கொடுக்காமல், அடல் - பராக்கிரமம் பொருந்திய, ஆண்மைகொண்டு-உன் வீரத்தைக் கொண்டு, எதிர் அடர்த்தியேல் - அவர்களுக்கு எதிராகப் போர்செய்வதே உனது கருத்தானால், மெய்-சத்தியமானது, விளங்க வரு - விளங்குவதற்கு இடமாய் அமைந்துள்ள, குருநிலத்தின் இடை - குருக்ஷேத்திரத்திலே, வந்து - வந்து, வெம் - கொடிய, சமர் விளைக்கவே - யுத்தமே செய்வேன் என்று, கைவழங்குக - கைபோட்டுத் தா, என[illegible] கேட்க,

காவலன் - துரியோதனன், நின்ற-அயலில் இருந்த, தூண் இடை-தூணிலே, அறைந்து-அடித்து, இவை - பின்வருமாறு, உரைக்கும் - சொல்லுவான்.

விரிவுரை:—'மெய் விளங்கவரு குருகில'மென்றது ஆற்றலும் படைகளின் மிகுதியும் துணைவர்பலமும், அதிகமாயுடையவன் துரியோதனன்ஆயினும், தன்னுடைய பொய்யை நிலைநிறுத்திக்கொள்ளும்படி செய்யப் புகுந்து அப்போரில் தோற்பதே திண்ணம் என்பதைக் குறித்து நிற்கின்றது. யுத்தத்திற்கு எல்லோரும் ஆயத்தமாய் அங்கு வந்து சேர்ந்தபோது ஒருகால் சூதிலும் சூழ்ச்சியே நிறைந்த சகுனி, ஐந்து ஊர் கொடுத்து அமர்நிகழாமல் அகற்றிவிடச் செய்யினும் செய்யலாம் என அஞ்சிய கண்ணன், போரே புரிய வேண்டுமென்று அவனைக் கைஅறைந்துதரக் கேட்டனன்போலும். இன்னபடி கையறைந்து தாஎன்றுதன்னைக் கேட்டதால் தன் வாய்மை வடுப்பட்டதென்று வெகுண்டனன் அப்பொய்யன்; அயலில் நின்ற தூணிடை அறைந்தனன். அயலிருந்த தூணைப் புடைத்த தீயோன் இவனுக்குமுன் வேறொருவன் இருந்திருக்கின்றான். அந்த இரணியன் அறைந்த தூணிற்கு உள்நின்றான் நெடுமால், இங்குப்புறத்தேநிற்கின்றான். வேற்றுமை அவ்வளவே. அந்தத்தில் இருவர்கதியும் ஒன்றே ஆயது.

---

புன்பி றப்புடைய பொதுவர் தங்களொடு
புறவி லானிரை புரந்திடு
முன்பி றப்பு முரலோடு கோவிய
ருனைப்பி ணித்தது மறந்துநீ
மன்பி றப்பிலுயர் குருகுலத் தவர்தம்
வாய்மை தானுமொரு மாசிலா
வென்பி றப்புமுண ராமலோ சபையி
லிந்த வாசக மியம்பினாய். 54

'தாழ்ந்த பிறப்புடைய நீயா, உயர்குலத்தவனான எனது வாய்மையைச் சந்தேகிப்பது' என்று துரியோதனன் கடிகின்றான்.

பதவுரை.

புன்-தாழ்ந்த, பிறப்பு உடைய - பிறப்பைஉடைய, பொதுவர் தங்கள் ஒடு - இடையர்களோடு, ஆன் நிரை-மாட்டுமந்தையை, புறவுஇல் - முல்லைநிலக் காட்டில், புரந்திடும் -மேய்த்துக்கொண்டிருந்த, உன் - உனது, பிறப்பும் - பிறப்பையும் ; கோவியர் - இடைமாதர், உனை-உன்னை, உரலோடு - உரலோடு, பிணித்ததும் - கட்டியதையும், மறந்து நீ - நீமறந்துபோய்; மன்பிறப்பில் - அரசர் பிறப்பில், உயர் - உயர்ந்தவர்களான, குருகுலத்தவர்தம் - குருகுலத்தவர்களுடைய, வாய்மைதானும் - வாய்மையையும், ஒருமாசுஇலா - ஒருவிதமான குற்றமும் இல்லாத, என் பிறப்பும் - என் உயர்ந்த பிறப்பையும், உணராமல் ஓ - தெரியாமலோ, சபையில்-இராஜசபையில், இந்த வாசகம்-இவ்வுரையை, இயம்பினாய் - (அஞ்சாது) பேசினாய்.

விரிவுரை:—குருகுலத்தவர்களுடைய வாய்மையினிடையில் தன்னுடையபொய் மறைந்துவிடுமென்று எண்ணினானே துரியோதனன். 'மன்னர் பெருமை இடையர் அறிவரோ'வென இங்குக் கண்ணனை இகழ்கின்றான். தன்னுடைய சத்தியத்தை அயிர்த்தானெனுக் கையறைந்துதர இராஜசபையில்கேட்டதால் தன் [illegible] தாம். குணத்தால் இழிந்திருப்பதை மறந்து குலமும்பிறப்புங் கூறிக் கூறிப் பெருமிதங் கொள்வது கயவர் இயற்கை.

குறிப்பு:—"தங்களொடு புறவில்," என்றும், "உரலோடு கோவியர்" என்றும் மூன்றும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய்கள் மிகாமற் புணர்ந்தன. (வால்யூம் 7, பக்கம் 244).

"உனைப் பிணித்தது," என இரண்டாம் வேற்றுமைத் தொகாநிலைத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்துபுணர்ந்தது—(7வது வால்யூம் 198 வது பக்கம்)

---

## இலக்கணம்.

ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளும் பொருளும், முன்னரே (5-வது வால்யூம், 923-வது பக்கம்)கூறியிருக்கின்றோம். இவ்வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பன. ஆனால்,"ஊரிலிருந்துபோனான்," மனைநின்று அகன்றான்" என் நீங்கல்பொருளில், இருந்து நின்று, என்னும் இவைஇரண்டும்சொல்லுருபுகளாக வருவதுண்டு.ஐந்தாம்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர்கள் தமிழில் அதிகம் வழங்குவதில்லை.

I. இருந்து, நின்று, என்னும் சொல்லுருபுகளைப் பெற்ற நிலைமொழிகளுக்குப்பின் வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வீட்டிலிருந்து + சென்றான் = வீட்டிலிருந்து சென்றான்.

மனைநின்று + போனான் = மனைநின்றுபோனான்

II. ஐந்தாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரில் சிலபோது மிகாமலும், சிலபோது மிகுந்தும், வருமொழிமுதல் வல்லினமெய், நிலைமொழி யிறுதி உயிரோடு புணர்கின்றது.

(i) ஐந்தாம்வேற்றுமைக்குரிய நீங்கல் ஒப்பு எல்லை ஏது என்ற நான்கு பொருள்களில், நீங்கல் பொருளைக்கொண்ட தொகைநிலைத்தொடரில், வருமொழி முதல் வல்லினமெய் மிகாது.

வரை + பாய்ந்தான் = வரைபாய்ந்தான் (வரையிலிருந்து பாய்ந்தான்.)

துயர் + தீர்ந்தான் = துயர்தீர்ந்தான் (துயரிலிருந்து தீர்ந்தான்.)

நெறி + திறம்பினான் = நெறிதிறம்பினான் (நெறியிலிருந்து திறம்பினான்)

தலை + கழிந்தமயிர் = தலைகழிந்த மயிர் (தலையிலிருந்து கழிந்த மயிர்)

(ii) எல்லைப் பொருளைக் கொண்ட ஐந்தாம்வேற்றுமைத்தொகையில், வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

தஞ்சை + தெற்கு (பட்டுக்கோட்டை) = தஞ்சைத் தெற்குப் பட்டுக்கோட்டை = தஞ்சையின் தெற்குப் பட்டுக்கோட்டை என விரியும். இன், என்னும் உருபு இங்கு எல்லைப் பொருளது.

நாகூர் + கிழக்கு(க்கடல்) = நாகூர்க்கிழக்கு(க்கடல்) (நாகூரின் கிழக்குக் கடல்)

குறிப்பு:—ஒப்புப்பொருளிலும்ஏதுப்பொருளிலும் ஐந்தாம் வேற்றுமைத் தொகைகள் பயின்றுவாக் காணேம்.



(iii) ஐந்தாம்வேற்றுமை உருபும்பயனும் உடன் தொக்க தொகைகள் மிக அருமையாயினும் அவ்வாறு வரும்போது வருமொழி முதல் வல்லினமெய் மிகும்.

கனி + பொன் = கனிப்பொன் (கனியிலிருந்து எடுக்கும் பொன்)

முலை + பால் = முலைப்பால்,முலையிலிருந்துவரும்பால்

குறிப்பு:—இவை, கனியின்கண் கிடைக்கும்பொன் என்றும், முலையின்கண் சுரக்கும் பால் என்றும், ஏழாம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையாகவுங் கொள்ளக் கூடியனவாம்.

---

# இரவீந்திரநாதர் கட்டுரைகள்

[269-வது பக்கத் தொடர்ச்சி]

## ராஜா ராம் மோஹன்ராய்

பெரிய பெரிய புராதன நாகரிகங்கள் அனைத்தும், அவ்வவ் தேசத்தின் நதியென்னும் ஜீவநாடியின்ஓட்டத்தினால் பிராணனுள்ளவைகளாயிருப்பதைச் சரித்திரந்தோறுங்காணலாம். ஒரு நதியானது அதுபாயும் நாட்டிற்குக் கொடுப்பது நீர், கொடுப்பது பலம், எனினும் யாதினுஞ் சிறந்த கொடை அதற்களிக்கும் சலனமே. அயல்நாடுகளுடனும் புற உலகத்தோடும் அமைந்த தொடர்பை நானாரூபமாகத் தோற்றுவிப்பது நதி. மரித்துக்கிடப்பதுபோன்று அசைவற்ற இதயத்தினுள் பாய்ந்துசெல்ல உயிரைக் கொணர்ந்து சேர்ப்பதும் ஓர் நதி.

ஓர் தேயத்திற்கு அன்னையே போன்று அமைவதற்குரிய ஆறானது நீரின்றி வறண்டுகிடக்குமேயாகில் அதன்நிலம்உலோபமுடையதாகவும், அதன் அன்னம் விளைவிக்கும் சக்தி குன்றியும் போய்விடும். ஆற்றுநீர் அற்ற ஒரு நாடானது உயிரிற்கு இன்றியமையாத சில பொருள்களை ஏதோ ஒருவண்ணம் கிடைக்கப் பெறலாமாயினும், ஏனையநாட்டினர்க்குவிருந்தளித்து உபசரிக்கவல்ல வளப்பம் இன்றித் தரித்திரநிலையிலேயே நிற்கும். அது பின், கொடுப்பதற்கேனும் பெறுவதற்கேனும் ஆற்ற லற்றதாகிவிடுகின்றது. அத்தகைய நாடு தனக்குள்ளேயே சிறைபட்டுக் கிடக்கின்றது என்னல் வேண்டும். அதன் ஒற்றுமையானது பல்வேறு கிளைகளாய்ப் பிரிவினையடைகின்றது. அதனோடு உறவு பூண்டவர் ஒன்றுசேர்கின்ற பாதை கடினமாகிவிடும். இவ்வண்ணம், புறவுலகத்தினோடு வேறுபாடும், தன்னுள்ளே மாறுபடு பிரிவுகளும் உடையதாகித் தீர்கின்றது அந்நாடு.

ஒரு நாட்டிலுள்ள மனிதர்களுடைய எண்ணங்களின் பாய்ச்சலும் ஒரு நதியின் ஓட்டத்தை ஒக்கும். சிறப்புடைய தேசங்கள் நதியைத் தமக்குத் தாயாகக் கொண்டு செழிப்பதுபோன்றே ஜனங்களும் தம் எண்ணங்களின்பெருக்கத்தினாற்றான்சிறப்படைகின்றனர். தேங்காமல் பாய்கின்ற தன் நிரந்தர சிந்தனையின் ஓட்டத்தின் யோகத்தினால் புறஉலகத்தைத் தனக்குள்ளே இழுத்துக் கொள்கின்றது; தனக்குள் இருக்கின்ற மாறுபாடுகள் யாவும் கழுவப்பெறுகின்றது; அச் சிந்தனைப்பிரவாகத்தின்கண் உள்ள புண்ணியத்துறைகளைப் புதிய புதிய பலன்களால் பரிபூரணம் ஆக்குகின்றது. உயிரிற்கு உரிய உணவை எல்லாத் தேசங்களுக்கும் எல்லாக் காலங்களிலும் அளிக்கின்றது.

இத்தகையதாகியஒரு விசித்திரமான சிந்தனைப்பிரவாகம் ஒருகாலத்தில் இப்பாரதநாட்டின்கண் இருந்தது. பண்டைக்காலத்தில் இந்நாடு,"ஆயந்து சர்வ்வத: ஸ்வாஹா, ச்ரண்வந்து விஷ்வே வேதாஹம்" (எல்லாரும் எல்லாத் திசைகளிலிருந்தும் வாட்டும், எல்லாரும் கேட்கட்டும், நான் அறிவேன்) என்று இயம்பக்கூடியதாக இருந்தது. உலகிலுள்ளோர் அனைவரையும் அழைத்து அவர்களுக்கு அறிவுறுத்தக் கூடியஓர் சிறந்த சத்தியம் தனக்குத் தெரியும் என்று விளம்பக்கூடிய வோர் உயர்ந்தநிலையில் இருந்தது. இப்பொழுதோ இந்நாட்டிற்கு அவ்வொளிஇல்லை. பிரகாசமற்ற நக்ஷத்திரத்தை இப்பிரபஞ்சத்தின் நக்ஷத்திரமண்டலமோ, இருக்கின்றதோ என்றுகூடக் கவனிப்பதென்பதில்லை. நிரந்தரமான காலத்தில் புராதன பாரதநாடு தன் நேரான அறிவைப் பிரகாசிக்கச் செய்தது. அளவற்ற தயைவாய்ந்த வண்மையுடன் தன்னைத் தானம் செய்துகொள்வதன் மூலமாகவே, இது இப்பிரபஞ்சத்தில் பிரகாசமுடன் விளங்கியது. அந்நாள், இந்நன்னாடு, கதியற்ற நிலையில் இழிவுற் றிருந்ததில்லை.

இது பல நூற்றாண்டுகளுக்குமுன் இருந்த நிலை. அதன்பின் சரித்திரத்தின் முன்னேறிச்செல்வதாகிய ஓட்டம் அடங்கிச் சப்தமற்று நின்றுபோய்விட்டது. பாரதபூமியின்கண் மானத உலகத்தைச் செழிக்கச் செய்திருந்த சிந்தனை என்னும் நதி வறண்டுகிடந்தது. ஓர் முதியோனைப்போல் அசைவற்றுஒடுங்கிவிட்டது. இத்தேயம் தனக்குள்ளே மாறுபாடுடைய பிரிவினையடைந்து, தன் சிந்தனையின்பிரகாசம் மழுங்கிவிட்டபடியால், அதன்பின்,உயிருள்ள எண்ணங்களின் ஒளியானதுபுறப்பட்டுத் தூரதேசங்களுக்குப்பாவிச்செல்லவில்லை.

நீரில்லையாயின் ஆற்றின் அடியிலுள்ள அசைவற்ற கற்கள் வழியை மறித்துக்கிடக்கும். ஆற்றின்வழிச் செல்பவர்தம் கால்களை வருத்தித் தடுப்பதன்றி,தனித்தனி கிடக்கும் அக்கற்களுக்கு வேறோர்பொருளும் இல்லை, பயனும் இல்லை. இத்தகையதோர் கேடு இத்தேயத்திற்கு வந்தபோது ஞானப் பிரவாகம் பாய இடலாமல் பாதை அடைபட்டுப்போயிற்று. புதிதுபுதிது சிருட்டிக்கவல்ல புத்தி உயிரற்றதாயிற்று. அந்நிலையில் தான், தேங்கிக் குழம்பும் ஆசாரங்களினால் பீடிக்கப்பட்டுப் பொருளும்பயனுமற்ற அனுஷ்டானங்களும் சிறிதேனும் சிந்தனை செல்வதின்றி முன்னோர் செய்தவைகளைப் பழக்கத்தின்தொடர்பினால் மட்டுமே மீண்டும் மீண்டும் செய்துவருகின்ற குருட்டு வழக்கங்களும்,முதன்மைபெற்றுப் பரவ ஆரம்பித்தன. இவை, அனைவரும் செல்லவல்லஇராஜபாதையில் தடைகளையுண்டாக்கிவிட்டன. இதனால், மனிதருக்கும் மனிதருக்கும் உள்ள தொடர்பு சிறுசிறு பாத்திகளாகக் குறுகிப் பின் அதற்குப் புறத்தே பின்னுஞ் சிறு துண்டுகளாகப் பியத்தெறிந்து சிதறப்பட்டது.

மனமானது தன் சாளரங்களை எல்லாம் மூடிக்கொண்டு தூங்கும்போது அது சிறைப்பட்டிருக்கின்றது. அப்போது விளைகின்ற கனவுகள் நிகில மெய்ம்மையுடன் ஒற்றுமையுடையன வல்ல. நித்திரையின் மேற்புறத்திலேயே அதற்குச் செல்வாக்கு உண்டு. ஓரே இடத்தை அது மீண்டும் மீண்டும் சுற்றித் தி

யும். அது எத்துணைவினோதமாயிருப்பினும், ஒப்பற்றதாயினும், பகிரங்கமாயிருப்பினும், அதற்கு வெளியிலிருக்கின்ற உண்மையான உலகத்தினின்று யாரும் உள்ளேசெல்வதற்கு வழி வாய்த்திடாது. ஆன்மாவின் அவாவென்னும் அம் மெய்யாய கனவிற்கும், உறங்கிய மனத்தின் இக் கனவின்போலிக்கும் யாதொரு தொடர்புமில்லை. ஆன்ம அவாவென்னும் இம்மெய்க்கனவு அந்நிலையில் இருப்போரனைவரையும் தொடர்புபடுத்தும் பொதுமைவாய்ந்தது. அன்னவரால் ஒப்புநோக்கிக்கொள்ள வல்லது. மற்று ஆன்மஅவா அற்றதாய் மனதின் உறக்கத்தில் எழுகின்ற கனவின்மயக்கமோ அவ்வாறன்று. எனினும், அதன் மெய்ம்மை பொய்ம்மை யனைய தாரதரங்களை ஏனையோரால் நிர்ணயிக்க இயலாது. பரிகசம் செய்வதெனின் செய்யலாம், அவ்வளவே.

இவ்வண்ணமே, பொருளில்லாத ஆசாரங்களாகிய கனவின் வலையில் சிக்குண்டிருந்தது பாரதநாடு. அதன் ஒளி அணைந்துபோகலாயிற்று. தனக்குள்ளேயே தன்னுடைய உண்மையே தனக்கே ஒற்றுமையுற விளங்காமல் பிரிந்துவிட்டது.

இத்தகையதோர் நிலையில் இப்பாரததேயம் இருந்தபோது ராஜா ராம்மோஹன் ராய் தோன்றினார். தன்னைத் தான் மறந்து நின்ற அந்தியின் இருளினூடே தோன்றினார். அந்நாள் இந்நாட்டுச் சரித்திரம் கவுரவமற்றுக் கரித்துகள் படர்ந்திருந்தது. அக்காலம் இப்பாரதநாடு தன் பொருள்மொழிப் போதனைகளை இழந்திருந்தது. நிகிலத்தின் புதிய காலத்திற்கேற்ற உபதேசம் ஒன்றும் அதன்பால் இருக்கவில்லை. அறையின் மூலையில் உட்கார்ந்து மரணகாலத்திற்குரிய மந்திரங்களை உருச்செய்துகொண்டிருப்பதே அதன் கதியாயிற்று. திறனற்ற நொய்ம்மைக்கு ஆளாகி இவ்வண்ணம் அவமானமடைந்திருந்த காலத்தில், அயல்நாட்டார் அதன் கதவினைக் கிட்டினார். இவர்களை உபசரித்து ஏற்றுக்கொள்வதற்குவேண்டிய உபகரணங்கள் இங்கு இல்லை. விருந்தினர்களாக அவர்களை நல்வரவு கூறி அழைக்கக்கூடிய சக்தி வீட்டின் எசமானனுக்கு இல்லாமற் போயிற்று. ஆகையால் வந்தவர், கள்வர்களைப்போல் கதவைத்தகர்த்துப் பாரதநாட்டின்பொக்கிஷ அறைக்குள் புகுவதாயினார்.

பாரதநாட்டின் அறிவு அக்காலம் மனதிற்குவேண்டிய உணவைப் புதிது படைக்கும் ஆற்றல் அற்றதாயிருந்தது. அதன் கழனிகள் களைகளால் மூடப்பட்டிருந்தன. விளைவற்ற அக்காலத்தில் சத்தியத்திற்குப் பசிதாகம் மிக உடையவராய்ப் பிறந்தார் ராஜா ராம் போகன்ராய். சரித்திரத்தின் உயிரற்ற குப்பைகளும், வெளிக்குச் செய்யும் போலி ஆசாரங்களும் சடங்குகளும் அவருக்குச் சிறிதேனும் திருப்தியளிக்கக்கூடவில்லை. ஞானத்தின்பால் எல்லையற்ற அவாவுடைய உற்சாகத்தை எங்கிருந்துதான் அவர் கொணர்ந்தாரோ அறியோம். சமயவாதிகளின் மாறுபாடாகிய பலவித வேலிகளையும் வெட்டித்தள்ளி வெளிப்பட்டது அவர் மனம். அவரைச் சுற்றிலுமிருந்தவர் கருத்துவைத்துத் தம் மனத்தைச் செலுத்தியிருந்த விடயங்களெல்லாம் அவருக்கு அருவருப்பே தந்தன. மயக்கத்தினின்று நீங்கின அறிவெனும் அரங்கினை அவர் விரும்பினார். அதுவே மனிதர் அனைவரும் ஒன்றுசேரும் புண்ணியத் தலமுமாம்.

இப்படி, வேலிகளை வெட்டி வழிசெய்வதும் மனிதர் ஒன்றுகூடுவதற்கு ஏற்ற தலங்களை ஸ்தாபிப்பதும் பாரதநாட்டிற்குஉரிய சாதனைகளாம். மற்றநாடுகளைக் காட்டிலும் இப் பாரதநாட்டிற்கே இச்சாதனை சிறப்பாகவேண்டப்படுகின்றது. ஏனெனில் ஒன்றாகச் சேரமாட்டாத வேற்றுமையும் பிரிவுந்தான் வலிமைவாய்ந்தபிரபலமுடையவைகளாயிருக்கின்றன. இங்கிலாந்தோ ஒருசிறிய தீவுஎன்னும் எல்லைக்குள் அடங்கியது. ஆகையாற்றான் அது தன் சாதனையை இச் சிற்றெல்லைக்கு நேர் எதிராகச் செலுத்தி, தன்னைத்தூரதேசங்களினிடையே பரப்பிக்கொண்டது. ஒவ்வொரு தேசமும் அதனதன் நிலைமைக்குத் தகுந்தபடி தனக்கேயுரிய "கருமத்தை நிறைவேற்றி வைமின் வைமின்," என்று தன் மக்கள்பால் கையேற்று நிற்கின்றது. ஒவ்வொரு தேசத்திற்கும், தனித்தனி ஆராய்ந்து முடிவிற்கு வரவேண்டிய கருமங்கள் சிறப்பாகஉள. சோர்வில்லாத முயற்சியினால் அக்கருமம் பயனுறச் சாதிக்கப்படவேண்டும். இத்தகைய வலிய முயற்சிகளினாலேயே அத்தேயத்தின்சரித்திரம் வெளிப்பட்டு நடைபெறுகின்றது. மனிதன் ஒவ்வொரு நிமிடமும் போராடியே தன் மனுஷத்துவத்தைப் பெறவேண்டும். மனித இனம் ஒவ்வொன்றின் சரித்திரமும் அது இவ்வெற்றிமேற் சென்ற யாத்திரையின் வரலாறேயாகும். அரும்பெருந் தடைகளை நீக்கிச்செல்கின்ற இந்நெறியே அவனுக்குச் சுகத்தையும் செல்வத்தையுந் தருகின்றது. வீரமுடையவர்களுக்கே உரியது இவ்வுலகம் என்று கூறப்படுவது இதனாற்றான். செயற்கரியவற்றைச் செய்வதும் அடைதற் கரியவற்றை அடைவதும் இயலுமென்று காட்டவே மனிதன் உதித்திருக்கின்றான். இது கைகூடும்பொருட்டே கடவுள் வேறு வேறு இனத்தவர்க்கு வேறு வேறு கருமங்களை நியமித்திருக்கின்றார். அவ்வந்த கருமத்தை ஏற்று அதற்குரிய மெய்யான விடையை இறுப்பதிற்றான் அது ஈடேறுகின்றது. இதனை மறந்தவர் மாண்டார். எல்லாவற்றையும் நம் முன்னோர் செய்து முடித்துவிட்டனர்களென்றும், ஆகையால் நாம் இனிச் செய்வதற்குரிய சிறப்பான கருமம் யாதும் இல்லையென்றும் கருதுகின்றவர் அனைவரும் துர்ப்பாக்கியசாலிகளே. உயிருள்ளளவும் ஒவ்வொருவனுக்கும் பல கேள்விகளும் சந்தேகங்களும் விளைந்துகொண்டேயிருக்கும். இவைகளுக்கு இடைவிடாமல் ஓர் உத்தரவளிப்பதே அவன் உயிரின் இயக்கமாகும். உயிரைச் சுற்றிச் சடப்பொருள்கள் எப்பக்கமும் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. இந்தச் சடம் என்னும் தடையைக் கடந்து தன் கருமத்தை இயற்றுவதே ஜீவனது காரியமாகும். நெடுங்காலமாகக் குவிந்துவிட்ட இச்சடத்தின்தடை இனி நீங்குவது அரிதென உடன்பட்டுவிட்டால், பிறகு தன் கழுத்தைச் சுருக்கிடக் கயிறு சுற்றியதுபோலாம். அழுக்குஅடைந்து தலைமயிர் சடைபட்டுக் கிடக்க, சிக்குநீக்கி அதனைச் செம்மைசெய்வதுவிட்டு, நெடுங்காலத் தழுக்குடைய சடை யிதுவென்று பக்தியுடன் அதனைப் பாராட்டலழகாமோ.

(தொடரும்)



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தாகாண்டம்—3. நட்புப் படலம்

[263-வது பக்கத் தொடர்ச்சி]

போய்யில் லாமற் புகன்றன னனுமன்.

தனக்கு விருந்து செய்தபோது சுக்கிரீவன் தன் மனைவியோடிருந்து உபசரித்த விலாமையைச் சிந்தித்து இராமன், "நீயும் நன்மனைக்குரிய பூவையைப் பிரிந்துளாய் கொலோ" என வினவியதற்கு அனுமன் நிகழ்ந்த தனைத்தையும் புகன்றான்.

பொய்யி லாதவன் வரன்முறை யிம்மொழி புகல
வைய னாயிரம் பெயருடை யமலர்க்கு மமலன்
வைய நுங்கிய வாயிதழ் துடித்தது மலர்க்கட்
செய்ய தாமரை யாம்பலம் போதெனச் சிவந்த

[பொய்யென்பது சிறிதும் இல்லாதவனான அனுமான் சுக்கிரீவனது வரலாற்றை இவ்வார்த்தைகளாற்சொல்ல, ஆயிரம் பேர்களுடையவனும், நிர்மலராகிய மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்ட நிர்மலனாகிய தலைவனும் ஆகியஇராமபிரானது, முன் பிரளயகாலத்தில் உலகங்களை யெல்லாம் விழுங்கிய வாயின் உதடு கோபத்தால் துடித்தது, கண்களாகிய செந்தாமரை மலர்கள் செவ்வாம்பல் மலரென்ன மிகச் சிவந்தன]

சொல்லின் செல்வன் என்னும் புகழை முன்இராமன் வாயினின்று ஏந்திய அனுமன் இங்குப் பொய்யிலாதவன் என்று பாராட்டப் பெறுவதை முதனூலோ டிணைத்து நோக்குங்கால் இரண்டொரு எண்ணங்கள் எழுகின்றன. பொய் யுகல்வதற்கு அமயமும்அவசியமும் வாய்த்தவிடத்து அதனைத்தவிர்த்து இயம்புவோரே பொய்யிலாதவர் என்று பேசுதற்குரியவர். அல்லது, பொய்பட வேறொருவன் புகன்றிருப்பதைத் திருத்தித் தருவோனும் அப்புகழிற்குஉரியவனாவான்.

வடமொழி முதனூலில் சுக்கிரீவன் தன்னுடைய வரலாற்றைத் தானே இயம்ப நேர்ந்தனன். அவ் வரலாற்றி லடங்கிய நிகழ்ச்சிகளனைத்தும் அனுமனுக்கும் நேரேதெரிந்திருக்கலாமாயினும், சுக்கிரீவன்இராமனுக்கு எடுத்துச்சொல்லியபோது அதனை அவன் இயம்பிய பான்மையையும் கேட்டுக்கொண்டிருந்தனன். சுக்கிரீவன் அங்குப் பின்வருவாறு கூறினான்:—

"சத்துரு சங்காரனாகிய வாலிஎன்பவன் எனக்குத்தமையன். பூர்வத்தில் அவனிடத்தில் எங்கள் தந்தை அதிகமும் அன்புபாராட்டிவந்தார். நானும் அவனிடத்தில் அவ்வாறே அன்பு பாராட்டிவந்தேன். எங்களுடைய பிதா இறந்தபிறகு மந்திரிமாரனைவரும் "இவன் மூத்தவன்" என்று சொல்லி, எல்லாரும் சம்மதிக்க, வாலிக்கு முடிசூட்டி அவனைவானரர்களுக் கதிபதி யாக்கினார்கள். தன்னுடைய முன்னோர்களிடமிருந்துதனக்குக்கிடைத்தஇராச்சியத்தை வாலியானவன் பரிபாலனம் பண்ணிவருநாளில் நான்அவனுக்குமிகவும் அடங்கிஅடிமைபோலிருந்தேன். அக்காலத்தில் மகாபராக்கிரமசாலியாகிய துந்துபியின் மூத்தகுமாரனான மாயாவி என்னுமோர் அசுரனிருந்தான். ஒருபெண்ணின்விஷயமாய்அவனுக்கும் வாலிக்கும்பெரும்கை உண்டாயிற்று. அவன்ஒருநாளிரவில் அனைவரும் அயர்ந்துநித்திரை செய்கையில் கிஷ்கிந்தைக்கு வந்து, கோட்டைவாயிலில்நின்று, உரக்கக் கர்ச்சனைசெய்து, வாலியைச் சண்டைக்கழைத்தான். தூங்கிக்கொண்டிருந்த என்தமையன் பயங்கரமான அந்தக் கர்ச்சனையைக் கேட்டுக் கொஞ்சமேனும் சகியாமல் எழுந்து வெகு வேகமாய் அவனைஎதிர்க்க ஓடினான். மகா கோபாவேசனாய் அவ்வசுரனைச் சங்கரிக்கச்சென்ற அவ்வாலியை அந்தப்புரத்து மாதர் அனைவரும் போகவேண்டாமென்று தடுத்தார்கள். நானும் அவனை அடிபணிந்து தடுத்தேன். மகாபலவானான வாலி எங்களனைவரையும் உதறிவிட்டு வெளியே சென்றான். அவனிடத்தில் எனக்கிருந்த அன்பினால் நானும் அவனைத் தொடர்ந்துசென்றேன். அவ்வசுரன்என் தமையனையும்என்னையும் தூரத்தில் கண்டவுடன் மிக்கதிகிலடைந்து ஓடத்தலைப்பட்டான். அங்ஙனம் பயந்து ஓடுபவனை நாங்கள் துரத்திச் செல்லும்பொழுது சந்திரன் உதயமாகிய வழி நன்றாகத் தெரிந்தது. அவன் ஓடிப் புற்களால் மூடப்பட்டு உட்புக வரிதாய் வெகு ஆழமாய்ப் பெரியதா யிருந்த ஒரு குகைக்குள் நுழைந்தான். நாங்கள் அக் குகையின் துவாரத்தில் சென்று நின்றோம். பகைவன் குகையினுள் புகுந்ததைக் கண்ட வாலி, மிக்க கோபங்கொண்டு, மெய் பதற, என்னைப் பார்த்துச் 'சுக்கிரீவா, நீ இவ்விடத்திற்றானே வெகு ஜாக்கிரதையாய் இத் துவாரத்தைக் காத்துக்கொண்டிரு. நான் உள்ளே புகுந்து சத்துருவைச் சங்கரிக்கின்றேன்' என்றான். அதைக்கேட்டுச் சத்துரு தமனனாகிய வாலியை அவனைப் பின்தொடர்ந்து செல்லும்படி எனக்குஅனுமதியளிக்கவேண்டுமென்று நான் இரந்து பின்னின்றேன். அவன் அதனை மறுத்து என்னைத் தன்னுடைய பாதங்களைத்தொட்டுச் சத்தியம்செய்யச்சொல்லித் தான்மாத்திரம் குகைக்குள் புகுந்தான். புகுந்தபின் நான் அவ்விடத்திலே ஒருவருஷகாலம் காத்திருந்தேன். காத்திருந்து அவன் திரும்பிவாராமையால் நான் எனது சகோதர வாஞ்சையால் அவன் மரித்துவிட்டான் என்று பயந்து மிகவும் துயரமடைந்தேன். வெகுகாலத்தின்பின் அக்குகைக்குள்ளிருந்து இரத்தவெள்ளம் நுரைத்துக்கொண்டு மேலே கிளம்பி வந்தது. அதைக் கண்டவுடன் நான் அதிக துக்கமடைந்தேன். அசுரர்கள் கர்ச்சித்த சத்தம் என் காதில் விழுந்தது. சண்டைசெய்யச் சென்ற என்தமையனுடைய குரல் கேட்டிலது. இந்த அடையாளங்களால் நான் என் தமையன் மாண்டான் என்று எண்ணி மலைபோன்ற பெருங் கற்பாறை யொன்றினால் அக்குகையின் துவாரத்தை மூடிவிட்டுத் துக்காக்கிராந்தனாய்க் கிஷ்கிந்தை சென்று சேர்ந்தேன். இந்தச் செய்தியை நான் ஒருவருக்கும் வெளியிடாது மறைத்து வைத்திருக்கவும் மந்திரிமார்கள் எல்லாவற்றையும் அறிந்து ஒருங்குகூடி எனக்கு முடிசூட்டி வைத்தார்கள். நான் இராச்சியத்தை வகித்து நீதியுடன் ஆண்டுவருகையில் வாலி அந்த அசுரனைக் கொன்றுவிட்டுக் கிஷ்கிந்தைக்கு வந்துசேர்ந்தான். நான் முடிசூடி அரசாண்டுவருவதை அவன் கண்டதும் கோபத்தால் கண்கள் சிவக்க மந்திரிமார்களையெல்லாம் பிடித்துக் கட்டிவிட்டு என்னைப் பலவாறாக நிந்தித்தான். அவனை ஒறுக்கத்தக்க வல்லமை எனக்கிருந்தும் தமையன் என்ற மரியாதையால் அந்தப் பாபச்செய்கைக்கு என் மனம் துணியவில்லை. நான் அவ்வாலிக்குத் தக்க மரியாதைகள் செய்து அவனை அடிபணிந்து நின்றேனாகவும் அவன் கோபத்தால் என்னை வாழ்த்தவுமில்லை, அருள் புரியவுமில்லை."

"அதன் பின்பு, நான் என் க்ஷேமத்தைக்கருதி, என் மேல் கோபங்கொண்டிருந்த என் சகோதரன் பிரீதியைச் சம்பாதிக்கப் பலவாறாக முயன்றேன். 'ஐயா, நீர் உம்முடைய சத்துருவைக் கொன்று க்ஷேமமாய்த் திரும்பி வந்ததற்குச் சந்தோஷமடைந்தேன். அநாதரக்ஷகனா யிருக்கும் உம்மையன்றி எனக்கு வேறு நாதனில்லை. [illegible]

கைகளையுடைய உதயசந்திரன் போன்ற இக்குடையை உமக்கு நானே பிடிக்கின்றேன்; வெண்சாமரை யிரட்டுகிறேன். நான் செய்யும் பணிவிடைகளை நீர் ஏற்றுக்கொள்ளும். மஹாராஜ, நான் வெகு துக்கத்தோடு ஒருவருஷகாலம் அக்குகையின் துவாரத்தில் காத்திருந்தேன்.பின்பு அக்குகையிலிருந்துகிளம்பிவந்த உதிரத்தின் பெருக்கைக் கண்டு நடுங்கிச் சோகத்தினால் பரிதபித்து மனம் கலங்கி ஒரு மலையின் கொடுமுடியைப் பெயர்த்தெடுத்துக் குகையின் வாயை மூடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுக் கிஷ்கிந்தை வந்துசேர்ந்தேன். முகம் வாடித் திரும்பிய என்னையழைத்து நகரத்தாரும் மந்திரிகளும் எனக்கு மகுடம் சூட்டினார்கள். இராச்சியத்தைக் கைப்பற்றும்எண்ணத்துடன் நான் இம் முடிசூட்டிக்கொள்ளவில்லையாகையால் என்னை நீர் மன்னிக்கவேண்டும். நீரேதான் இந்நாட்டுக்கதிபதி. எல்லாவிதக் கௌரவங்களுக்கும் நீரே உரியவர். நான் அன்றுபோல இன்றும் உமது அடிமையே. நீர் இல்லாத காரணத்தால் நகரத்தார் என்னை அரசனாக்கினார்களேயன்றி மற்றில்லை. மந்திரி பிரதானிகளும் குடிகளும் மல்கிய இந்நகரத்தை நான் யாதொரு கெடுதலுமின்றிப் பரிபாலித்து வந்தேன். என்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தஇந்தஇராச்சியத்தை நான் இப்போது உம்மிடத்தில் ஒப்புவித்துவிட்டேன். சத்துருக்களை நாசம் செய்யவல்ல வீரனே,என்மீதுயாதும் கோபம்கொள்ளவேண்டாம். நான் தலைவணங்கி என் இருகைகளையும்கூப்பி வேண்டுகின்றேன்.அரசனில்லாவிடில் இராச்சியத்தைப் பகைவர் அபகரித்துக்கொள்ள எண்ணங்கொள்வார்கள் என்றெண்ணி அமாத்தியர்களும் நகரத்தார்களும் பலாத்காரமாக எனக்கு முடிசூட்டினார்கள்' என்று இவ்வாறு நான் அன்புடன் சொல்லவும் வாலி என்னைக் கடிந்துபேசி 'சீ! நீ கெட்டாய்!' என்று, பலவாறு நிந்தித்துத் தன் பிரஜைகளையும் மந்திரிகளையும் அழைத்துச் சபைகூட்டிச் சினேகிதர்கள் நடுவில் என்னைக் குறித்து மிக மிகக் கடுமையாய்ப் பேசினான்:—'சபையாரே, மகா பலம்பொருந்திய மாயாவியென்ற அசுரன் ஒருநாளிரவில் கெட்ட எண்ணங்கொண்டு என்னுடன் போர்புரிவதற்குவிரும்பி என்னையழைத்தான் என்பது உங்களுக்குத் தெரியுமே. நான் அதைக்கேட்டு என் அரண்மனையை விட்டு வெளியிற்செல்லக் கொடியவனாகிய என்தம்பி என்னைப் பின்தொடர்ந்து வந்தான் மகாபலவானான அவ்வசுரன் அன்றிரவில் தன்னைத்துரத்திச்செல்லும் எனக்குத் துணையாக என்பின் மற்றொருவன் வருவதைக்கண்டு பயந்து ஓட்டமெடுத்தான். அவன் ஓடி ஒரு பெரிய குகைக்குள் நுழைந்தான். மகா பயங்கரமும் ஆழமுமான அக்குகையில் அவன்புகுந்துகொண்டதை நானறிந்து என்தம்பியாகிய இக்கொடியவனை நோக்கி 'இவ்வசுரனைக் கொல்லாது நான் நகரத்துக்குத் திரும்பேன். 'நான் இவனைக்கொன்று திரும்பும் வரையில் நீ இந்தப் பிலத்துவாரத்தில் காத்திருக்கக்கடவாய்' என்றுசொல்லி இவன் அங்கிருக்கின்றான் என்று நம்பிக்கொண்டு உட்புகுவதற்கு அரிதாயிருந்த அக்குகைக்குள் நான் பிரவேசித்தேன்.அவ்விடத்தில்அசுரனைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு ஒருவருஷம் சென்று கடைசியாய் அவனைக் கண்டுபிடித்துச் சிறிதும் சிரமமின்றி அக்கொடியவனை அவன் பந்துவர்க்கங்களுடன் கொன்றேன். அக்குகைக்குள் அவன் கதறி ஓலமிட்டு மாண்டபொழுது அவன் வாயிலிருந்து பெருகிய உதிரவெள்ளம் எங்கும் பரவினமையால் எனக்கு உடனேதானே வெளியில்வர முடியாமல் போய்விட்டது. நான் திரும்பிவருகையில் குகையின்வாய் மூடப்பட்டிருந்தமையால்வெளியில்வருவதற்குவழிதோன்றவில்லை. 'சுக்கிரீவா, சுக்கிரீவா' என்று பலமுறை இரைந்து கூவியும்யாதும் மாறுத்தரமில்லலாமையால் நான் மிகவும் துக்கமடைந்தேன். பின்புஎன்கால்களால் பலமுறை உதைத்து அப்பாறையைக் கீழே தள்ளிவிட்டு வெளிப்பட்டுஇந்நகரம் வந்துசேர்ந்தேன்.எனது இராச்சியத்தை யடையவேண்டுமென்றே ஆசையால் சுக்கிரீவன் சகோதரவாஞ்சையை முற்றும் மறந்து என்னைக் குகைக்குள் அடைத்துவிட்டுவந்தானென்பதில் சந்தேகமில்லை' என்றுஇவ்வாறு சொல்லி ஒரே வஸ்திரத்துடன் என்னை யோட்டிவிட்டான். இராகவ, என்னை இவ்வாறு அவமானம் செய்து என் மனைவியையும் பிடித்துக்கொண்டான். அவனுக்கு மிகப் பயந்து சமுத்திரஞ் சூழ்ந்து காடடர்ந்த இப் பூமிமுழுதும் நான் அலைந்து திரிந்து ஒரு காரணத்தால் வாலியால் அணுகொணாத இந்த ரிசியமூகபர்வதத்தில் மனையாளைப் பறிகொடுத்த துக்கத்துடன் பிரவேசித்துளேன். வாலிக்கும் எனக்கும் பகைநேர்ந்தவிதம்முற்றும் சொல்லிவிட்டேன். இராகவ, நிர்த்தோஷியாகிய எனக்கு இப்பெரிய விசனம் வந்திருக்கிறது. எல்லா உலகங்களுக்கும் அபய மளிக்க வல்ல வீரனே,வாலியினிடத்தில் பயந்துநடுங்கும் எனக்கு அபயந் தந்தருளவேண்டும்.''

வடநூலில் சுக்கிரீவன் தன் சரிதத்தை இராகவனுக்குச் சொன்னதிறம் இது. அதற்கும் அநுமன் இங்குச் சொல்லியதற்கும் நிகழ்ச்சி யளவில் வேற்றுமை அதிகம் இல்லையாயினும், சுக்கிரீவன் இயம்பிய இரண்டொரு செய்திகளை அநுமன் பெயர்த்துப் பேசாமல்விட்டது வீணிற்கன்று என்று எண்ணவேண்டியிருக்கின்றது. வாலியின் பலத்திற்குத் தான் எவ்வகையிலும் குறைந்தவன் அல்லன் என்ற நினைவை இராமனது மனதில் விளைவிக்க முயன்றனனாகிச் சுக்கிரீவன் ''அவ்வசுரன், என் தமையனையும் என்னையும் தூரத்தில் கண்டவுடன் திகிலடைந்து ஓடத்தலைப்பட்டான்'' என்னுங்கால் வாலியேபோல் தானும் மாயாவிக்கு அஞ்சவரு பொருளா யமைந்ததை வற்புறுத்தினான். இதனோடு நிற்கவில்லை. ''வாலியை ஒறுக்கத்தக்க வல்லமை எனக்கிருந்தும் தமையன் என்ற மரியாதையால் அந்தப் பாபச் செய்கைக்கு என் மனம் துணியவில்லை'' என்று இவன் இயம்பியதை உண்மையென ஏற்றுக்கொள்ளல்எளியதன்று. ஏனெனில், அதே தன்மையில் இவன் இன்னும் இருக்கலாமே! அவ்வா றிலாமை அவன்வாயிலிருந்தே வெளிப்படுகிறது. தமையனென்ற கண்ணோட்டமுடைய அவனே இப்பொழுது, ''எனக்குச் சத்துருவாகிய என் தமையனை எப்படி வதைக்கவேண்டுமோ அவ்வாறு செய்யவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டு அத்தமையனது உயிரைக்குடிக்கவல்லகூற்றுவன்என்றமுறையிலேயே இராமனுடன் இன்று உறவுசெய்துகொள்கின்றான்! எனின்,வாலியை ஒறுக்கத்தக்க வலிமை தனக்கு இருந்ததென்றும், முன்னோன் என்ற மரியாதையால் அது செய்யாமற்றானே ஓடினனென்றும் கூறியது கொள்ளத்தகுந்ததொன்றன்று. முன் வாலி துரத்தியபோது இச்சுக்கிரீவனது நினைவு எதுவாயினும் ஆகுக. இப்பொழுது அவ்வாலியைக் கொன்று வீழ்த்துவதென்றே துணிந்து நிற்கின்றான் என்பது அவன் வாயிலிருந்தே தெரிகின்றது. ஆயின்,அவ்வாலியை ஒறுக்கத்தக்க ஆற்றல் தனக்கு உண்டென்று முன்னர் உரைத்ததை இவனே நம்பியவனானால், தானேசென்று எதிர்த்துப் பொருது கொல்வதற்கு என்ன தடையிருக்கின்றது? இவ்வளவு காலம் ஒளிந்திருப்பானேன்; இராமனை அது செய்யுமாறு விழுந்து விழுந்து இரப்பானேன்! மற்றொருவனைக்கொண்டு கொல்வித்தால், அது அத்தமயனைக் கொன்றபடி யாகாதோ! ஊன்தின்போர் சிலர் தாம் உயிர்க்கொலை செய்வதில்லை என உரைக்கின்ற முறைமையை ஒத்திருக்கும் இது. ஆதலின், வாலியை



ஒறுக்கத்தக்க வலிமை தனக்குண்டென்று உரைத்ததும், மூத்தோன் என்ற அன்பினால் அவனைக் கொல்லத் தவிர்ந்தான் என்று இயம்பியதும், பொய்யே என நினைத்தல் பிழையன்று. இராமனுக்கு முன் தன்னை ஒருபுறம் பெரிய வீரனாகவும் மறுபுறம் பெரிய உத்தமனாகவும் தெரிவித்துக்கொள்ளும்படி புகன்றவைகளே இவை. சுக்கிரீவன் பொய்யுஞ் சொல்லவல்லவன் என்பதற்கு அவன் ''என் இராச்சியத்தைஇழந்திருக்கின்றேன், அதனைப்பெறவேண்டும்'' என்றுகூறியதே ஐயமற்ற கரியாய் நிற்கின்றது. ''என்'' இராச்சியம் என்று இவன் குறித்தது எதனையோ?

இன்னவாறு, சுக்கிரீவனது இராச்சியமும், வாலியை ஒறுத்தக்க அவனது ஆற்றலும், அது செய்யாத அவன் அன்பும் பொய்யாகுந் தன்மை வெளிப்படுவதுகொண்டு, குகையின் வாயிலில் இரத்தம் கொந்தளித்தசெய்தியும் படைத்துமொழி கிளவியேதானோவென்று ஐயம் பெரிது அடையவேண்டி வருகின்றது. குகையின் வாயிலைக் கல்லால் அடைத்தது தான் வாலியின்பால் செய்த வஞ்சனையன்றென விளக்க முயல்வதால் விளைகின்ற வார்த்தைகள் இவை.இதுபற்றி அவன் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் தானே ''பொய் பொய்'' என்று தன்னை விளம்பிக்கொள்கின்றது. தன் பக்கம்ஒருவன் 'சாக்ஷிகள்' அதிகமதிகம்கோரக்கோர, அவன், தானே நம்பாததொன்றை மற்றவரை நம்பும்படி செய்ய மிக வருந்துகின்றான் என்பதை உணர்ந்துகொள்ளலாம்.நுரைத்து வந்த இரத்தத்தோடு,அசுரர்கள் குரலும் இரைத்துவருவதை அற்றைநாள் சுக்கிரீவன் கேட்டதாகக் கூறியது, ''மெய்போலும்மே,மெய்போலும்மே'' பகர விரைந்த பான்மைத்து. இருவரில் இறந்தது வாலியேஎனக் கொள்வதற்கு இரத்தத்தின் சாக்ஷிமாத்திரம்போதாதன்றோ.ஆதலால்அவன்குரலை அடக்கி அசுரர்குரலை மாத்திரம் கிளப்பிவிட்டான். மற்று மொன்று; பொய் சொல்வோர், தாம் சொல்வதை ''ஊரெல்லாம் அறியும்'' என்றேனும், அல்லது, ''ஒருவரும் அறியார்'' என்றேனும், ஆராய்ச்சி வசதிகளுக்கு ஏற்றபெற்றி சாதிப்பது எங்கும் இயற்கை.சுக்கிரீவன் இவ்விரண்டிற்கும் இடையே தடுமாறுகின்றான். இதனை ஒருவருக்கும் தான் சொன்னதில்லை என்பான் ஒருபோது; மற்று, இது ஏனையவருக்குத் தெரியாமல் போய்விடுமோ என்று இராமன் சங்கை கொள்வானே என மனமருண்டு மறுபோது, மந்திரிமார்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டுவிட்டார்கள் என்னலாகின்றான். அறிந்து கொண்டவர்,நுரைத்த இரத்தத்தை ஒருகால் பார்த்தால் பார்த்திருக்கலாம்;வாலியின்குரல் கேட்காததைச் சுக்கிரீவன் சொல்லாதவரையில் அவர் தெரிந்துகொண்டிருக்க இயலாது. அன்றியும், இச்செய்தியை யாவர்க்கும் சொல்லவேண்டியதே இயற்கையாயிருக்க அதனைச் சுக்கிரீவன் இரகசியமாய் வைத்துக்கொண்டிருந்ததன் காரணம் காணலரிது. இன்னுமொன்று இங்குச் சிந்திதற்குளது. பிலத்தினுட் சென்றவர் வாலியும் மாயாவியும் இருவரே. ஆதலின் சுக்கிரீவன் அசுரன் ஒருவனது குரலே கேட்டிருக்கக்கூடும். அஞ்சி ஓடுவான்போல் வாலியை வஞ்சித்து அப்பிலத்தினுள் கொண்டு செலுத்திப் பிறகு அசுரர்கள் பலரை ஏவிக் கொல்லும் நினைவினோடு வந்தனன் என்று எண்ணினாற்றான் முன்னரே அப்பிலத்தினுள் அசுரர்களை இவன் ஒளித்து வைத்திருக்கலாம் என்று ஊகிக்க இயலும். அதற்கு யாதும் ஆதாரம் இல்லை. எனின், அசுரர்கள்' பலர் கர்ச்சித்த சப்தம் இவன் கேட்ட தெங்ஙனம்! இதுவும் பொய்யால் வளர்ந்த பன்மையே என்ன எண்ணல் வேண்டும். மாயாவி ஒருவன் வாலியைக் கொன்றுவிட்டான் என்று தான் எண்ணினன் என்றால் எவரும் நம்பமாட்டார் என்ற சூழ்ச்சியால் சுக்கிரீவன் இப்பொழுது அசுரர்கள் கர்ச்சனையைக் கற்பிக்கின்றான். ஒருமை பன்மையாவது பொய்ம்மைக்குப் புதுமையன்று. ஷேக்ஸ்ப்பியர் எழுதிய 'காற்றுமழை' என்னும் ஒரு நாடகத்தில், அலான்ஸோ என்னும் அரசன் அயர்ந்துநித்திரைசெய்கையில்,அவன் தம்பி ஸபஸ்ட்டியன் என்பவனும் அவனது தீய நண்பன் அன்டோனியோ என்பவனும், மன்னனைக்கொன்று அரசினை அடைய அவாவினர்களாகி உருவிய கத்தியுடன் நண்ணுங்கால் அரசனும் அவன் உழையவனாகிய கன்ஸாலோ என்பவனும் கண்விழித்து,வாளோடு வருவதன் விடயம் யாதென வினவ—

**ஸபஸ்ட்டியன்,**—நின் துயிலினைக்காத்து நாங்கள் இங்கே நின்றிருந்தபோது, இப்பொழுதுதான், ஆழ்ந்ததோர் முக்காரம் இடிக்கக் கேட்டோம். எருதுகளை அல்லது சிங்கத்தைப்போல் என்னலாம். நின்னை அது எழுப்பவில்லையா? என்னுடைய காதினை அது மிக மிக உக்கிரமாய் இடித்தது.

**அலான்ஸோ:**—யான் கேட்கவில்லையே ஒன்றும்.

**அன்டோனியோ:**—ஆகா! அரக்கன் செவியினை வெருட்டவல்லதோர் முழக்கம், பூகம்பம் விளைப்பதற்குமது போதுமானது, சிங்கத்தின் ஒரு முழு மந்தையின் கர்ச்சனையே அது நிச்சயம்.

எனச்,சிங்கம் மந்தையாகத்திரண்டு கர்ச்சித்த செய்தி, இங்கு அசுரர்கள் கர்ச்சித்த பரிசையே ஒத்திருக்கின்றது.

எனின் சுக்கிரீவன் இயம்பிய வரலாற்றில் இத்தனை பொய்கள் சேர்த்துக்கொண்டனன். வான்மீகிமுனிவர் இவ்விடத்தில் தமக்கு வழக்கமாகிய கதைமுறை மரபைவிட்டு நாடக இயற்கையின் நயம்பட அமைத்தார்.கல்வியும்அறிவும் வாய்ந்த அநுமன், சுக்கிரீவன் வாய் நின்று வந்தவைகளை அம்முதனூலில் கேட்டுக்கொண்டிருந்தபோது அதனில் பொய்யுடைய பாகங்கள் இவையிவைஎன்று உணர்ந்துகொள்ளல்அருமையன்று. மற்றுக் கம்பர் நூலில் அவ்வரலாற்றைத்தான் சொல்லும்படி நேர்ந்தபோது,பொய்யாகின்ற அவைகளை அடியுடன் விட்டுவிட்டான். இதனைக் கம்பர் பெருமான் பாராட்டுகின்றார். பாராட்டி, ''பொய்யிலாதவன் வரன்முறை யிம்மொழி புகன்றான்'' என்று மகிழ்கின்றார். மற்று, ''பொய்யிலாது அவன் வரன்முறை யிம்மொழி புகல'' எனப் பிரிப்பது இக்கருத்திற்குப் பின்னும் அமைதியுறப் பொருந்தும்.(பொய்யிலாது-பொய்கலக்காமல், அவன்-அந்த அநுமான், வரன்முறை-சுக்கிரீவனது வரலாற்றை, இம்மொழி - இவ்வார்த்தைகளால், புகல - சொல்ல, என்றேனும் அல்லது, பொய்யிலாது-பொய் கலவாமல், அவன் - அச்சுக்கிரீவனது, வரன்முறை - வரலாற்றை, இம்மொழி - இவ்வார்த்தைகளால், புகல-சொல்ல, என்றேனும் கொள்ளலாம்.) மற்று பொய்யிலாதவன் வரன்முறை,என்பதை, பொய்யில்லாதவனாகிய சுக்கிரீவனது வரலாற்றை, எனப் பொருள்செய்வது, வஞ்சப்புகழ்ச்சியாய் நின்றாலன்றிப் பொருந்துமா றில்லை.

# மதுரைக் கோவை

[270-வது பக்கத் தொடர்ச்சி]

## XVII. ஒருவழித் தணத்தல்

**அலரறிவுறுத்தல்.**

மலர்மாலை யம்புயத் தார்மது ரேசர்
வரையிலெங்கள்
குலமாலை வல்லி குவிமுலை மேல்வஞ்சிக்
கொம்பனையார்
சிலமாலை முத்த மணிவதல் லாது
தெரிந்துதெரிந்
தலர்மாலி கைபுனைந் தாலண்ண லேயென்கொ
லாவதுவே. 225.

**ஒருவழித் தணப்புக் கூறல்.**

கூடிற் பெருகுங் குவிமுலை போல்வசைக்
குன்றகன்று
நீடிச் சுருங்கு மருங்குலைப் போற்பிறை
நீரவஞ்
சூடிச் சிறந்த முடிச்சொக்கர் மால்வரைத்
தோன்றலினி
நாடித் தெரிவை பழிபிறங் காம
னயர்தருளே. 226

**பிரிந்தவழிக் கலங்கல்**

மாகந் தரிக்கும் பிறைமுடி யாளர்
வளர்மதுரைப்
போகந் தரிக்கும் புணர்முலை யாயுயிர்
போய்விடவெற்
றூகந் தரித்திருந் தாலுநண் பாள
ரறமறந்த
சோகந் தரித்தங்ங னேயிருப் பாரொரு
தோகையரே. 227.

**ஆடிட மறந்தமை கூறல்.**

கோட்டும் புதிய வரிமணற் பாவையைக்
கோலஞ்செய்யச்
சூட்டுந் தொடைகொண்டு வந்துநிற் பார்சொக்கர்
கூடல்வெற்பிற்
பூட்டுந் தாள வடமும்பொன் னுணும்
பொறுதிடையை
வாட்டுந் துணைமுலை யாய்மலர்க் காவு
மறந்தனரே. 228.

**பெற்றவழி மகிழ்தல்.**

கொன்றைச் சடாடவி யார்சொக்க நாயகர்
கூடல்வெற்பி
லன்றைத் தலையளி செய்தகன் றூர்குங்கு
மாசலமு
மன்றற் றொடையு நிரம்பிய வாசம்
வழங்குமிளந்
தென்றற் கொழுங்கன்றுக் கென்னகைம் மாறுகொல்
செய்வதுவே. 229.

**தற்காட் டுறுத்தல்.**

தாளக் கவிக்கருள் வார்கடம் பாடவிக்
காவிலெம்மை
யாளத் தகுநண்பர்க் கார்சொல்லு வார்குழைக்
கப்புறம்போய்
மீளப் பிறழுங் கடற்கே பிறந்து
விரைகளப்பத்
தாளச் சயிலத்தின் முத்தின் சலாபந்
தலைப்பட்டதே. 230.

**பலவகையோடு புலம்பல்.**

கழிக்கான லங்கம்புள் காள்கண்டல் காள்வண்டு
காள்வருடச்
சுழிக்கா லமருங் கருநெய்தல் காள்முடி
சூடித்தென்னர்
வழிக்கா யரசிருப் பார்சொக்க நாதர்
மதுரையிற்பெண்
பழிக்கார் பரமறி யேனென்செய் தார்சென்ற
பாதகரே. 231.

**மதியோடு புலம்பல்.**

நிலையா யுயிர்கொண்டு நீத்தகன் றூரை
நினைந்துநினைந்
துலையா தவரவர் நாளுரை யாயும்ப
ருண்ணவுண்ணத்
தொலையாத வாரமு தேமது ராபுரிச்
சொக்கர்செம்பொற்
சிலையாளர் கண்மணி யேயவர் சூடுஞ்
சிகாமணியே. 232.

**கடலோடு புலம்பல்.**

மறங்காலுங் கூரிலை வாய்மழு வாளர்
மதுரைநகர்ப்
புறங்காவல் சூழும் புரிகட லேயொரு
போதுகண்க
ளுறங்கா துழன்றொரு பெண்பாவி யிங்ங
னுயிரழிவ
தறங்காவ லோவுரை யாய்நெடுங் கால
மகன்றவற்கே. 233.

**கடலோடு முனிதல்.**

சுழித்தாரை யங்கங்கை யார்சொக்கர் தாளைத்
தொழாரெனவென்
விழித்தாரை வெள்ளஞ் சொரிதல்கண் டாயன்பர்
மீண்டுசென்ற
வழித்தாரை யுஞ்சுவ டுந்தெரி யாது
மறுதிரைகொண்
டழித்தாய் கடலுன்னை யோதிரு மாலுக்
கணையென்பதே. 234.

**கானலோடு புலம்பல்.**

தேக்கும் [ெ]பரும்பழி வெள்ளமுங் காதற்
றிரைக்கடலுங்
கோக்கும் புரவெள்ளத் தார்பிழைப் பார்வெண்
குடைநிழல்மண்
காக்குஞ் சடையர் கடம்பா டவிநறைக்
கானல்முத்தம்
பூக்குந் தடம்புன்னை சூழ்கழிக் கானற்
புளினங்களே. 235.



**புள்ளோடு புலம்பல்.**

உள்ளே நிரம்பி வரம்பழி காத
லொருவருக்கும்
விள்ளே னெனவிருந் தேனிது நாள்வண்டு
வீழவண்டு
கள்ளே கமழ்கொன்றை யார்கடம் பாடவிக்
கானலிற்கம்
புள்ளே யினியடங் காதடங் காதென்
பொருமலுமே. 236.

**தன்படர் பிறர்மேற் சாற்றல்.**

அலராகி யாவி தளர்ந்துதள் ளாடி
யலைந்துகண்ணீர்
புலராது மெய்பசந் தாய்நெய்த லேபொய்
புரிந்தநெஞ்சிற்
கலரா னவரறி யாக்கடம் பாடவிக்
கானலிலன்
பிலரா யகன்றன ரோவுன்னை யாளு
மிறைவருமே. 237.

**இவற்றேடு தலைவற் குரைத்தது.**

குனியார் வளர்பிறை [சேர்]சொக்க நாயகர்
கூடல்சுற்றும்
பனியார் மலர்ப்பொழில் காளளி காள்பெரும்
பாவிபெறுந்
தனியாக நெஞ்ச மழிந்தறை போகத்
தவிப்பதெல்லாம்
இனியா கிலுமுரை யீரெம்மை யாளு
மிறைவருக்கே. 238.

**உரைத்திலை யென நெஞ்சோடு நேர்ந்து கூறல்.**

ஆயுஞ்சொல் லாள ரபிஷேகச் சொக்க
ரடையலர்போற்
றேயும்பொய் யாவியின் செய்தியெல் லாமென்
செயலறிவாள் [தன்பு
போயுஞ்சொல் லா[ள்]சொல்லும் பூவைசொல் லா
பூண்டநெஞ்சே
நீயுஞ்சொல் லாதுவந் தாயினி யார்சொல்லி
நிற்பவரே. 239.

**கூடலிழைத்தல்.**

ஆருங் கருத்தறி வாரில்லை யேயுன்னை
யன்றியன்பர்
சேருங் கருத்துள தோவுரை யாயிடை
தேயவிம்மி
வாருஞ் செறுத்த முலையுமை பாகர்
மதுரைபெற்ற
பேருந் தரித்தனை யேமட மாதர்
பெருந்தவமே. 240.

**தோழியோடு புலம்பல்.**

எனக்குந் தலையெழுத் திப்படி யாலெனக்
கேற்றநெஞ்சு
தனக்குங் கருணை சிறிதில்லை யாற்புரஞ்
சாய்த்தசெங்கைக்
கனக்குன்ற வில்லி கடம்பா டவியிவை
கண்டுமுள்ளன்
புனக்குஞ் சிறிதில்லை யாலுன்னை யோவென்
னுயிரென்பதே. 241.

**தோழி யாற்றுவித்தல்.**

கவரோல முத்தலைச் சூலா யுதர்கடம்
பாடவியிற்
றுவரோ டிணங்கிதழ் வாயணங் கேயுனைத்
தோய்ந்தவன்றே
யுவரோத ஞாலஞ் சிறிதாக வுள்ளன்
புடையநண்ப
ரவரோ பிரிந்திருப் பாரவர்க் கோநெஞ்
சழிவதுவே. 242.

**ஆற்றமை யுறுப்பு முதலியவற்றற் கூறல்.**

மல்லார் புயத்தர் மதுரா புரிநண்பர்
மாவின்பின்னே
செல்லா மறுகுமென் சிந்தனை போலெனைத்
தேற்றமிந்தச்
சொல்லா லைமைந்துயிர் கொண்டிருந் தாலுந்
துணைக்கைவளை
நில்லா ததற்கென்செய் வேனணங் கேயென்கொ
னீசொல்வதே. 243.

**மாலைப்பொழுது கண்டிரங்கல்.**

மைமாலை வேல்விழி யீரன் பிலாத
மவுணரொரு
கைமா றிதற்கினி யென்செய்வ ரோவறு
கால்வருடுஞ்
செய்மாலை மார்பர் திருமாலை வாயிலென்
றீவினைபோ
லிம்மாலை யும்பொரு தென்செய்ய வோவந்
தெதிர்ப்பட்டதே. 244.

**இரவினீட்டம்.**

கற்றைச் சடிலர் கடம்பா டவியிலிக்
கங்குலைநா
னற்றைப் படுகங்கு லென்றிருந் தேனென்
னளவிலிந்த
வொற்றைத் திகிரியஞ் செல்வனெங் கேபுக்
கொளித்தனனோ
விற்றைப் படுங்கங்கு லோகஞ்ச யோனிக்
கிடுங்கங்குலே. 245.

**தோழியோடு விட்டுயிர்த் தழுங்கல்.**

ஆயுந் துயரி னியல்பறி யாளென்
னியலறிந்த
நீயுங் கவலுமென் னெஞ்சறி யாய்கங்கை
நீர்பெருகித்
தோயுஞ் சடாடவி யார்சொக்கர் தாளைத்
தொழாதவர்போன்
மாயும் படியன்றி யாரறி வாரென்
மயல்வெள்ளமே. 246.

**நொந்து தோழி வொளித்தல்.**

மூளுங் கொடுங்கனல் வெண்ணகை யால்முப்
புரமுங்கண்ணல்
வேளும் படவென்ற வெள்ளிமன் றூளர்
வியன்சிலம்பி
ளுளுங் கலவி யனுராக போக
நலந்தருவார்
சூளுந் தெரிந்தன மாலினி யேதென்று
சொல்லுவதே. 247.

**ஒருவழித்தணத்தல் முற்றும்.**

# இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

அங்கம் 2. களம் 1.

[265-வது பக்கத் தொடர்ச்சி]

ஹார்ட்காஸல் வருகிறார்.

ஹார்ட்:—ஐயன்மீர், உங்களை நான் பின்னுமோர் முறை மனப்பூர்வமாய் வரவேற்கின்றேன். உங்களில் மார்லோ என்பவர் யார்? (மார்லோ தலையசைக்கின்றான்). ஐயா, நீங்கள் வந்ததற்கு உவக்கின்றேன். இருந்த விடத்தில் இருந்துகொண்டே என் நண்பர்களை வரவேற்பது என் வழக்கமன்று. வாயிற்படியண்டையிலேயே வந்தழைக்கும் பழைய வழக்கமே எனக்கு விருப்பமானது.

மார்லோ:—(ஒருபுறமாய்) நம்முடைய பேர்களை முன்னமே வேலைக்காரர்கள் மூலமாக இவன் தெரிந்துகொண்டிருக்கிறான். (ஹார்ட்காஸலைப் பார்த்து) நல்லது, உன் கவனத்தையும் மரியாதையையும் பாராட்டுகின்றோம். (ஹேஸ்ட்டிங்ஸைப் பார்த்து) நாம் அணிந்து வந்திருக்கிற உடையைக் காலையில் மாற்றிவிட வேண்டும் என்று நினைக்கிறேன். இது எனக்கு மிகவும் வெட்கமாயிருக்கிறது.

ஹார்ட்:—இந்த வீட்டில் நீங்கள் ஒன்றிற்கும் யோசிக்கவேண்டாம்; இஷ்டம்போல் இருக்கலாம்.

ஹேஸ்ட்:—(மார்லோவைப் பார்த்து) மார்லோ, நீ சொல்வது சரியென்றே எண்ணுகிறேன். முதலிலே ஓங்கி மோதிவிட்டால் போரிற் பாதி வென்றதுபோலாம். நான் வெள்ளையும் பொன்னையுங் கொண்டு யுத்தத்தைத் துவக்க உத்தேசித்திருக்கிறேன்.

ஹார்ட்:—இந்த வீட்டில் நீங்கள் ஒன்றையும் நிர்ப்பந்தமாகக் கருதவேண்டாம். இது "சுயேச்சா மண்டபம்." உங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படியே நடந்துகொள்ளலாம்.

மார்லோ:—ஆனாலும், ஹேஸ்ட்டிங்ஸ், நாம் யுத்தத்தை அதிக குரூரமாய் முதலிலேயே ஆரம்பித்துவிடுவோமானால், பிறகு முடிவதன்முன் படைக்கலம் இல்லாமற்போய்விடலாம். முதுகுகாட்டி ஓடும்போது காத்து மறைப்பதற்கே சரிகை வஸ்திரங்களை நான் நிறுத்திவைத்துக்கொள்ள நினைத்திருக்கிறேன். *

ஹார்ட்:—போர்முனையில் பின்னிடைவதைப்பற்றி நீங்கள் பேசும் இது, புகழ்பெற்ற தளகர்த்தர் அந்த மார்ல்பரோ என்பவரை எனக்கு நினைப்பூட்டுகின்றது. டினேய்ன் என்னும் இடத்தை நாங்கள் முற்றுகை போடப் போனபோது, முதலில் அவர் தம் சைனியத்தை அழைத்து—

மார்லோ:—மஞ்சள் உள்ளங்கியும் பழுப்பு மேலங்கியும் நன்றாகப் பொருந்துமல்லவா?

ஹேஸ்ட்:—முதலில் அவர் தம் சைனியத்தை அழைத்தார். அச்சைனியத்தில் ஐயாயிரம் ஆட்கள் இருக்கலாம்.—

ஹேஸ்ட்:—நான் அப்படி நினைக்கவில்லை. மஞ்சளும் பழுப்பும் செம்மையாகப் பொருந்துவது அருமை.

ஹார்ட்:—சொல்வதைக் கேளுங்கள் ஐயா; நான் முன் சொன்னபடி, தன் சைனியத்தை அழைத்தான்; அதில் ஐயாயிரம் ஆட்கள் இருக்கலாம்—

மார்லோ:—பெண்களுக்கெப்பொழுதும்பளபளப்பானவைகளின்மேல் ஆசை அதிகம்.

ஹார்ட்:—ஐயாயிரம் ஆட்கள் இருக்கலாம். பண்டங்கள் படைக்கலன்கள் முதலியவைகள் வேண்டிய அளவு இருந்தன. அப்பொழுது, மார்ல்பரோ பிரபு தன் அயலில் இருந்த ஜார்ஜ் ப்ரூக்ஸைப் பார்த்து—ஜார்ஜ் ப்ரூக்ஸைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்—"இதோ, என் செல்வமெல்லாம் பந்தையம், அந்தச் சைனியத்தை ஒரு துளி இரத்தம் சிந்தாமல் பிடித்துவிடுகிறேன் பார்' 'என்றார். அப்பொழுது*

மார்லோ:—நல்ல வென் நண்பா, என்னவிது; இதற்கிடையில் குடிப்பதற்கேதேனும் கொடுப்பாயானால், நாங்களும் சேர்ந்து இந்த முற்றுகையைத் தளராமல் நடத்துவதற்கு அது உதவியாயிருக்கும்.

ஹார்ட்:—குடிக்கவா வேண்டும் ஐயா!—(ஒரு புறமாய்) என்ன ஆச்சரியம், இப்படிப்பட்ட அடக்கம் நான் எங்கும் பார்த்ததில்லையே.

மார்லோ:—ஆம், ஐயா, குடிப்பதற்குத்தான்! பிரயணத்திற்குப் பிறகு காரமாய் ஏதேனும் குடிக்கக் கிடைத்தால் சுகமாயிருக்கும். இது, "சுயேச்சாமண்டபம்' என்று நீதானே சொன்னாய்.

ஹார்ட்:—இதோ, பானகம் இருக்கிறது.

மார்லோ:—(ஒருபுறமாய்) . சரி சரி, இந்தப் பயல் தன் சுயேச்சாமண்டபத்தில் அவனுக்கு இஷ்டமானதைத்தான் நமக்குக் கொடுப்பான் போலிருக்கிறது

ஹார்ட்:—(பானகத்தைக் கையில் கொடுத்து) இது உங்கள் மனம்போலிருக்குமென்று எண்ணுகிறேன் நானே என் கையால் கலந்தது இது. நன்றாக இருக்கிறதென்று ஒப்புக்கொள்வீர்களென்றே நம்புகின்றேன். மிஸ்டர் மார்லோ, இப் பானகம்போல் நமது உறவு இனிமையுறக் கலக்கட்டும்.

மார்லோ:—(ஒருபுறமாய்) சுத்த அதிகப்பிரசங்கி இது! இருந்தாலும், ஆசாமி நிரம்ப விசித்திரமானவன். இவனைக் கொஞ்சம் வேடிக்கைபண்ணுவோம்; ஐயா, உங்கள் ஊழியன்.

ஹேஸ்ட்:—(ஒருபுறமாய்) பெரிய மனுஷன் ஆவதற்குக் கற்றுக்கொள்வதன்முன், தான் ஒரு சாப்பாட்டுக்கடைக்காரன் என்பதை மறந்து நம்மோடு, ஓகோ, உறவாடப் பார்க்கிறான் இந்தப் பயல்.

மார்லோ:—உன் பானகத்தின் சிறப்பைப் பார்த்தால், இப்பக்கங்களில் நல்ல வியாபாரம் நடக்குமென்று நினைக்கின்றேன். தேர்தல்கள் நடக்கும்போது வேலை மும்முரமாக இருக்குமல்லவா?

ஹார்ட்:—அந்த வேலையை நான்விட்டு நெடுங்காலமாகிவிட்டது. பெரியமனிதர்கள் என்று பேர் வைத்திருப்பவர் தாங்களே ஒருவரையொருவர் தேர்ந்துகொள்ளத்துவக்கியபின் என்னைப்போன்றவர்களுக்கு அதில் என்ன வேலையென்று விட்டுவிட்டேன்.

ஹேஸ்ட்:—ஆகையால், அரசியல் வேலைகளில்இப்பொழுது உனக்கொன்றும் அக்கரை இல்லையென்று தெரிகின்றது.

ஹார்ட்:—சிறிதுகூட இல்லை. மற்றவர்களைப்போல் நானும், ஒருகாலத்தில் அரசாங்கத்தார் செய்யும் தவறுகளைக் குறித்துக் கடுகடுத்ததுண்டு. நாளுக்கு நாள் என் கோபம் அதிகமாவதன்றி அரசாங்கத்தார் சிறிதேனும் சீர்திருந்த நான் காணவில்லை. ஆகையால் இந்த விஷயத்தில் என் தலையை உடைத்துக்கொள்வதை நிறுத்திவிட்டேன்.

ஹேஸ்ட்:—ஆகையால், இப்பொழுது, சாப்பிடுவதும் சினேகிதர்களோடு தமாஷாக இருப்பதுமாக உன்காலம் மிகவும் சுருசுருப்பாகக் கழிகிறது?

ஹார்ட்:—சுருசுருப்பாக இருக்கிறேன் என்பது வாஸ்தவந்தான். இந்தச் சுற்றுவட்டத்தில் ஏற்படுகிற விவகாரங்களிற் பாதி இந்தக் கூடத்திலேயே தீர்கின்றது.

மார்லோ:—(பானகத்தைக் குடித்துக்கொண்டே) ஏ, கிழ நண்பா, உன் பானகத்தால் கிடைக்கின்ற நியாயம் எந்த நியாயஸ்தலத்திலும் கிடைக்காது என்று கூறுகிறாயோ?

ஹார்ட்:—ஆம், அதுவும், கொஞ்சம் வேதாந்தமும்.

ஹேஸ்ட்:—(ஒருபுறமாய்) நல்லது, சாப்பாட்டுக்கடைக்காரன் வேதாந்தத்தைப்பற்றிக் கேள்விப்படுவது இதுதான் முதல்.

ஹேஸ்ட்:—ஓகோ, அனுபவம் வாய்ந்த தளகர்த்தனைப்போல அவர்களை எல்லாப் பக்கத்திலிருந்தும் எதிர்க்கின்றாயோ. அவர்களுடைய அறிவை வசப்படுத்தக்கூடுமானால்உன்வேதாந்தத்தால் எதிர்க்கிறாய்! அவர்களுக்கு அறிவு இல்லை என்பது தெரிந்தால் இதைக்கொண்டு எதிர்க்கிறாய்(பானகத்தைக் காட்டிக் குடிக்கிறான்) வேதாந்தியே, நீ நீடூழி வாழ்க.

ஹார்ட்:—பேஷ், பேஷ், மிக்க வந்தனம், ஹ! ஹ! தளகர்த்தனைப்பற்றிப் பேசினீர்களே, அது பெல்க்ரேட் என்னும் இடத்தில் யுஜீன் அரசர், துருக்கர்களோடு செய்த சண்டையை எனக்கு நினைப்பூட்டுகின்றது. சொல்கிறேன் கேளுங்கள்—

மார்லோ:—பெல்க்ரேட் சண்டையைவிட எங்கள் சாப்பாட்டைப்பற்றிப் பேசவேண்டியது தற்காலம் மிகவும் அவசியம் என்று எண்ணுகின்றேன். நல்லது உன்வேதாந்தம் இவ்வீட்டில் சாப்பாட்டிற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது

ஹார்ட்:—சாப்பாட்டிற்கா, ஐயா (ஒருபுறமாய்) இப்படி ஒருவனை அவன் வீட்டிலேயே யாரேனுங் கேட்டதுண்டா!

மார்லோ:—ஆம் ஐயா, ஆம், சாப்பாட்டிற்குத்தான் ஐயா; எனக்கும் பசியெடுக்கின்றது. இன்றிரவு பார்; பேய்போலக் கிடைத்ததை யெல்லாம் பிய்த்துத் தின்றுவிடுகின்றேன்.

ஹார்ட்:-(ஒருபுறமாய்) இவனைப் போன்ற வொரு வெட்கங் கெட்ட நாயை நான் இதுவரையிற் பார்த்ததில்லை. (மார்லோவைப் பார்த்து) சாப்பாட்டிற்கு ஐயா, என்ன சமைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. என் டோரதியும் சமையற்காரியுமாகச் சேர்ந்து இவைகளைத் தமக்குள்ளேயே முடிவு செய்துகொள்கிறார்கள். இப்படிப்பட்ட விஷயங்களை நான் முற்றிலும் அவர்களுக்கே விட்டுவிடுவது வழக்கம்.

மார்லோ:—ஓகோ! அப்படியா!

ஹார்ட்:—முற்றிலும்—நல்லது. இந்த நிமிஷம் சாப்பாட்டு வகைகளைப்பற்றி அவர்கள் சமையலறையில் சிந்தித்துக்கொண்டிருப்பார்களென்று எண்ணுகிறேன்.

மார்லோ:—ஆனால், என்னையும் அவர்களது மந்திராலோசனை சபையில் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன். என் வழக்கம் எப்பொழுதும் அப்படித்தான். வெளியில் புறப்பட்டேனானால் எப்பொழுதும் என்னுடைய சாப்பாட்டை நானேதான் தீர்மானம் செய்துகொள்ளவேண்டும். சமையற்காரியைக் கூப்பிடு. ஏன் தயங்குகிறாய், அதில் ஒன்றும் குற்றமில்லையே.

ஹார்ட்:— இல்லை, இல்லை, குற்றம் ஒன்றுமில்லை. ஆனாலும்; என் சமையற்காரி, பிரிட்ஜெட், அதிகம் பேசுவதில்லை. அவளைக்கூப்பிட்டாலோ, வைதுவைது நம்மையெல்லாம் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவாள்.

ஹேஸ்ட்:—அப்படியானால், ஒரு பட்டியாவது போட்டுக் கொண்டுவரச் சொல். கணக்குப்பட்டிக்குத் தகுந்தபடியே நான் எப்பொழுதும் என் பசியையும் அடக்கிக்கொள்வது வழக்கம்.

மார்லோ:—(திகைத்து நிற்கின்ற ஹார்ட்காஸலைப் பார்த்து) ஐயா, அவர் சொன்னது சரி; என் வழக்கமும் அதுதான்.

ஹார்ட்:—இங்கே உத்திரவு செய்ய உங்களுக்கு உரிமை யிருக்கிறது. ரோஜர், இன்றிரவு சாப்பாட்டிற்குச் செய்திருப்பவைகளை ஒரு பட்டிபோட்டுக் கொண்டுவா. ஐயா, மிஸ்டர் ஹேஸ்ட்டிங்ஸ், உங்கள் நடையுடை பாவனைகளைப் பார்க்கும்போது, என் மாமனார் தளகர்த்தர் வால்லாப் என்பவரின் நினைவு வருகின்றது. தின்று முடிகிறவரையில் ஒருவனுக்கும் சாப்பாடு கிடைக்குமென்பது நிச்சயமில்லை, என்று அவர் அடிக்கடி சொல்லுவார்.

ஹேஸ்ட்:—(ஒரு புறமாய்) எல்லாம் பெரிய கைதான். இவன் மாமனார் தளகர்த்தராமே! இவன் தாயார் நீதிபதி யென்பதை இனி மிகச் சீக்கிரம் கேட்போம். (ரோஜர் ஒரு காகிதம் கொணர்ந்து கொடுக்கிறான்) நல்லது, பட்டியில் என்ன இருக்கின்றது, படி.

மார்லோ:—(காகிதத்தைப் பார்த்துக்கொண்டே) என்ன இது? முதல் வரிசை......இரண்டாம் வரிசை......மூன்றாம் வரிசை......என்ன இழவு ஐயா இது; லண்டன் நகரச்சபை யத்தனையும் இங்குச் சாப்பாட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றோமென்று எண்ணி யிருக்கிறாயா, என்ன?

ஹேஸ்ட்:—முதலில், எழுதியிருப்பதைப் படி.

மார்லோ:—முதலில் - பருப்பும் பச்சடியும்.

ஹேஸ்ட்:—உன் பருப்பு நாசமாய்ப் போகட்டும்!

மார்லோ:—உன் பச்சடியும் நாசமாய்ப்போகட்டும் என்கின்றேன் நான்!

* தாம் தாம் மணம் செய்துகொள்ள வந்திருக்கின்ற பெண்களின் காதலைப் பெறுவதற்குச் செய்கின்ற முயற்சியை யுத்தமென்றும், அக் காதலை அடைவதை வெற்றியென்றும், அவர் மனத்தைக்கவரும்படி தாம் அணிகின்ற ஆடைகளைப்படைக்கலன்களென்றும், இவ்விருவரும்விளையாட்டாகப்பேசிக்கொள்கின்றனர். வெள்ளையும் பொன்னும் என்பது, வெள்ளைப்பட்டில் சரிகை இழைத்த உடை. மற்ற ஆடைகளெல்லாம் அப்பெண்களின் மனத்தைக்கவராமல் தாம் பின்வாங்க நேருமானால் அப்பொழுது கடைசியாகப் பட்டாடைகளைப் பிரயோகிக்கலாம் என்கிறான்.

*டோனியின் வஞ்சனைக்குஆளாகிமார்லோவும் ஹேஸ்ட்டிங்ஸும், ஹார்ட்காஸலை ஒருசாப்பாட்டுக்கடைக்காரனென்றே எண்ணியிருக்கிறார்களாகையால், அவனைச்சிறிதேனும் மதியாமல், அவன் பேசுவதையும் காதில்போட்டுக்கொள்ளாமல் அலக்ஷியம் செய்து, தாங்கள் இருவரும் சிறிதேனும் அடக்கமின்றிப் பேசிக்கொள்ளலாகின்றனர். இந்தப் பிழை இவர் செய்வது நினைவில் இருந்தால்தான் இவர்களது நடத்தையின் பொருள் விளங்கும்.

ஹார்ட்:—இருந்தாலும், பசித்திருப்பவர்களுக்குப் பருப்பும் பச்சடியும் நன்றாய் ருசிக்குமே.

மார்லோ:—பிறகு, மிட்டாயும் பழமும்.

ஹேஸ்ட்:—உன்மிட்டாயை,ஐயா,கொண்டுபோய்த் தட்டோடே கொட்டு.

மார்லோ:—உன் பழமெல்லாம் கூடையிலேயே அழுகட்டும்.

ஹார்ட்—(ஒருபுறமாய்) இவர் துஷ்டத்தனத்தைக் காண என் புத்தி திகைக்கின்றதே. (அவர்களைப் பார்த்து), நீங்கள் என் விருந்தினர். உங்கள் இஷ்டப்படி மாற்றிக்கொள்ளுங்கள். வேறு எதனையேனும் விடவேணும் மற்றவேணும்வேண்டுமானால் சொல்லுங்கள்.

மார்லோ:—நாங்கள் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நீ இஷ்டப்பட்டுப் போட்டதைத் தின்கிறோம். சரி, சாப்பாட்டைப்பற்றி இத்தனைநேரம் சிந்தித்தாகிவிட்டது. இனி, எங்கள் படுக்கையைக் காற்றுடப்போட்டு வைப்பதைப்பற்றிக் கவனிக்கவேண்டும்.

ஹார்ட்:—அந்தக் காரியத்தை என் கையில் ஒப்புவித்துவிடுங்கள். நீங்கள் சிரமப்படவேண்டாம்.

மார்லோ:—உன் கையில் விட்டுவிடுவதா! அதுமுடியாது.நானே இவைகளை நேரில் கவனிப்பது வழக்கம்.

ஹார்ட்:—இதைப்பற்றித்தான் உங்களுக்கு ஒன்றும் கவலை வேண்டாம் என்கின்றேனே.

மார்லோ:—இல்லை இல்லை, நான் சொன்னால் சொன்னதுதான். (ஒரு புறமாய்) அப்பா இவனைப்போலத் தொந்தரவுபிடித்த பயல் நான் பார்த்ததேயில்லை.

ஹார்ட்:—நல்லது, நான் உங்களுடனேனும் வருகிறேன் - (ஒரு புறமாய்) தற்காலப் பிள்ளைகள் மேற்கொள்ளும் அடக்கம்என்பது இதுவாகஇருக்கலாம்; ஆனால் பழையகாலத்தில் இத்தகைய துடுக்குந் துஷ்டத்தனமும் நான் கண்டதில்லை.

[மார்லோவும் ஹார்ட்காஸலும் போகின்றனர்]

ஹேஸ்ட்:—இந்தப் பயல் செய்யும் மரியாதையால் படுகின்ற தொந்தரை தாங்கமுடியவில்லை. ஆனாலும், நம்மைச் சந்தோஷப்படுத்தவேண்டுமென்று செய்கிற இந்த உபசாரங்களைக் கண்டு யார்தான்கோபிக்கமுடியும் - ஹா! என்ன இது நான் காண்பது. என் அதிர்ஷ்டத்தால் நேவில்லியா வருகிறாள்!

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[267-வது பக்கத் தொடர்ச்சி]

6-ம் பத்து, 6-ம் தசகம்.

1-ம் பாசுரம்

மாலுக்கு வைய மளந்த மணாளற்கு
நீலக் கருநிற மேக நியாயற்குக்
கோலச் செந்தாமரைக் கண்ணற்கென் கொங்கல
ரேலக் குழலி யிழந்தது சங்கே.

பதக்குறிப்பு:—நியாயற்கு-நியாயம்- நீதி, அதாவது மாதிரி-நீலமேகம்போன்ற நிறத்தைஉடையவனுக்கு- ஏலக்குழலி - தலைமுடி நல்ல ஏலத்தின் வாசனைபோன்ற மணத்துடனிருந்ததென்று-இவளின் குழலுக்கு நல்ல பரிமளமுண்டு. தேன் கசியும் பூக்களை இப்போழ்து இவள் சூடி யிருப்பதாகக் கொள்வது ஸமயத்திற்கு விருத்தமாகும். இப்பிராட்டியோ பகவானிடத்திலுள்ள வேட்கையால் மற்றொன்றும் கருதாது அவனையே சிந்தித்திருக்கும் ஸமயத்தில் தன்னை அலங்கரித்துக்கொண்டா ளென்றாவது பிறர் அலங்கரிக்க ஸம்மதி தந்தாளென்றாவது கொள்ளல் அஸம்பாவிதம். பரிமளமுள்ள பூக்கள் கூந்தலில் பெய்து கொள்ளாதபோது அதற்கு ஏல வாஸனை எங்கே வந்தது? இப்பிராட்டியின் கூந்தலுக்குப் பூக்கள் ஊட்டும் மணமன்றி இயற்கை வாஸனையை ஆழ்வார் குறிக்கிறாரென்று கொள்ளுதல்தான் உசிதம். அக்கூந்தலின் பரிமளம் இன்னவகையைச் சேர்ந்ததென்று நிஷ்கரிஷிக்கக் கூடாத ஓர்வித ஆச்சரியமான கந்தம். அதை ஏலக்குழல் என்று பரியாயமாய் அருளிச்செய்தபடி. இவ்வாழ்வார் மஹா ரஸிகரான கவியென்பதற்கு அடுத்த மூன்றாம் பாசுரமே நற்சான்றாகும். இக்கூந்தலே பிறங்கியும் அதாவது நீண்டும், இருமையாகவும் அதாவது அடர்ந்து நெருங்கி யிருப்பதாகவும் வர்ணிக்கிறார். இதிலும் ரஸிக்கியம் அடுத்த 5-ம் பாசுரம். அதில் இப்பிராட்டியைக் "கண்புனை கோதை" என்று வர்ணிக்கிறார். அதாவது தன்னைக் கண்டார் கண்களைப்புனைந்து(கட்டி) விடுகிறாளென்று வர்ணித்தபடி- இவளைப் பார்த்த கண்களானவை திரும்பி வாங்கவொட்டாதபடி இவளி னழகிலேயே ஊன்றி நின்றுவிடுமென்று- வால்மீக மஹாகவிபோல் சின்ன சொற்களால் ஆழ்வாரும் சிருங்கார இரஸத்தை வர்ணிக்கக் கூடிய வரகவியன்றோ? இழந்தது சங்கே - சங்கால் செய்தகைவளைக் களைகையினின்றும் நெகிழ்ந்துபோகும்படி தேகம் மெலிந்துவிட்டாள்-எப்போழ்தும்பகவானைச் சிந்தித்து அவன் வரவையும் கலவியையும் எதிர்பார்த்துக் கிடைக்கமாட்டாமையால் மனக்கிலேசப்பட்டுத் தேஹத்தில்இளைத்துப்போனாள்.இதனைத் திருவள்ளுவனார் "படர்மெலிந்திரங்கலில்" விஸ்தரிக்கிறார். அவதாரிகை:—இத்தசகம் சென்ற தசகத்தின் தலைப்பில் குறித்தபடி பகவத் கீதை 18-ம் அத்தியாயம் 57-வது சுலோகத்தில் கற்பித்த "மத் சித்த ஸததம் பவ" அதாவது என்னையே சதா சார்வகாலமும் சிந்தித்திரு" என்றுஇட்டகட்டளையின்படி ஆழ்வார் பகவானிடத்தில் ஈடுபட்டுத்தன்னுடையசொந்த ஆத்ம குணங்களை இழந்ததைஅவரின் நேசர்கள் வியஸநிப்பதுபோல் பகவானிடத்தில் அத்தியந்தம் ஈடுபாடுள்ள ஓர் பெண்ணின் தாயார் தன்பெண் அவனையே சிந்தித்து இளைத்துத் தன் தேஹம், நிறம், காந்தி அழகு பண்பு மாண்பு இவை முதலாய பெண்களுக்குரிய குணங்களை இழந்துவிடுகிறாளென்ற பாசுரங்களால் குறிக்கிறபடி.

பொழிப்புரை:—மரங்களும் இரங்கும்படி "மணிவண்ணனே" வென்றுகூப்பிட்டும்அவனைக்காணாமையாலே அத்தியந்தம் வியஸநத்தினால் பீடிக்கப்பட்ட பிராட்டியை அவள் தாயார் நோக்கி, இவளிட மதிக மனக்கிலேசப்பட்டு, எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களுக்குத் தோற்றுத் தன்பெண் இழந்தவற்றை விபரமாய்ச் சொல்லி யலற்றுகிறாள் - இப்பாசுரத்தில் அவனுடைய சிநேக ஆதரவை "மால்" என்றபதத்தாலும், மூன்றுஉலகங்களும் உய்யத் தன் தாள்களை எல்லாருங்காண வளந்த உபகாரத்தை "வையமளந்த"



னென்றதாலும், பூமிப்பிராட்டியை மணந்த ஸௌலப்பியத்தால்அவனை'மணாளன்'என்றும், நீலமேகத்திற்கு ஸாமியம் சொல்லுவதால் அவன்தண்ணளியும் "செந்தாமரைக் கண்ணன்" என்றதால் அவன் திவ்ய ஸௌந்தரியத்தையும் ஒவ்வொன்றையும் நினைத்து உட்கொண்டுதன்பெண் அடியில்குறித்தபடி நினைத்தவைகளைப் பெருமையாலே இளைத்துச் சங்குவளைகளை இழந்தாளென்கிறாள். இவ்வண்ணமே ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வோர் அடைமொழியாலும் பகவானுடைய திவ்விய சரித்திரம் ஒவ்வொன்றையும் இப்பிராட்டியின் ஈடுபாட்டுக்குக் காரணமாகக் கண்டுகொள்க-பண்டையகாலத்தில் வட இந்தியாவில்போல் தென்னாட்டிலும் பெண்டீர்கள் கைகளுக்குச் சங்குவளைகளை ஆபரணமாகத் தரித்தார்கள்.

---

2-ம் பாசுரம்

சங்குவில் வாள்தண்டு சக்கரக் கையற்குச்
செங்கனிவாய்ச் செய்ய தாமரைக் கண்ணற்குக்
கொங்கலர் தண்ணந் துழாய்முடி யானுக்கென்
மங்கை யிழந்தது மாமை நிறமே

இப்பாசுரத்தில் கூறியிருப்பதைப் "பசப்புறுதல்" என்பார் திருவள்ளுவ நாயனார்.

குறிப்பு:—இப்பாசுரத்திற்குஉரை,பகவான்சங்கை ஏந்தியிருக்கிற அழகுக்குத் தோற்று இப்பிராட்டி தேகத்தின் நல்ல காந்தியை இழந்தாள் எனக் கூறலாம். இதுபோலவே தண்டு -(கைத்தடியை) யேந்திய அழகுக்குத் தோற்றாளென்றும் வாளையேந்தியஅழகு பிராட்டியை தோற்பித்ததென்றும் பொருள்சொல்லிக்கொண்டு போகலாம். இப்படி உரையாகுமாயின் "செய்யதாமரை கண்ணனுக்கு" என்று அடுத்தபடி வருகின்ற அடைவுக்கும் அவ்வண்ணமே தனியாகப் பொருள்கொள்ள வேண்டி வரும். இவ்வகையில் சென்ற பாசுரத்திலேயே "செந்தாமரைக் கண்ணனுக்கு"மேற்குறித்த ரீதியாகப் பொருள் வரைந்த பிறகு சொன்னதைத்திரும்பச்சொல்லும்புனருக்திதோஷம் பாசுரத்துக்கு ஸம்பவிக்கும். ஆழ்வார் பாசுரங்களில் வரும் ஸந்தர்ப்பங்களும் பத அடைவுகளும் பெரும்பாலும் விசேஷப் பயனைத்தரவே உபயோகிக்கப் பட்டிருக்கின்றனவென்று நாம் அடிக்கடிஎடுத்துக்காட்டியிருக்கிறோம் - இவர்காவியம் புகழ்பாடுவதின் நிமித்தமே வாய்ந்தது அல்ல - ஒன்றுதொட்டுப் பின்வரும் ஸங்கதிகள் பரஸ்பர ஸம்பந்தமில்லாமலும் இணக்கமும் சேர்த்தியுமில்லாமலும் இந்த உத்கிரந்தத்தில் வருவதில்லை:ஆகையால் இதையெல்லாம்கணிசித்துப் பூர்வ உரைகாரர்களில் சிறந்த ஆசான் திருக்குருகைபிரான் பிள்ளான் இப்பாசுரத்தில் சேர்த்து படிக்கப்பட்ட தோற்றங்களெல்லாம் ஒரே ஸமயத்தில் வாய்ந்த விசித்திரவைபவத்தின் பகுதிகளாகித் தனித்தனியும் எல்லாம் சேர்ந்தும் ஆழ்வாரின் திருவுள்ளத்தை முழுதுமடங்கக்கவர்ந்து ஆனந்தத்தையும் விஸ்மயத்தையும் ஊட்டியிருக்கவேண்டு மென்பார். அச்சமயம் எதுஎனில் அதுஎன்றுபராமரிசித்துமஹாபலிமூன்றுஉலகங்களையும் தானம் கொடுத்ததும் ஒரு நொடியில் பகவான் திருவிக்கிரமாவதாரத்தை எடுத்து மேல்படி உலகங்களைத் தனதாக்கிக் கொண்டதே யென்று தீர்மானித்துத் தம்முரையில் சுட்டிக்காட்டுகிறார். இவ்வுரையின் பொருத்தம் அவர் தம்திருவாக்காலே தெரியும்.ஆயினும் அதை நன்குமதிக்கச் சில குறிப்புக்களை நாமெடுத்துக் காட்டுதல் நலம்.

I. மஹாபலி சக்கரவர்த்தி மனுநூலின் ராஜ்ஜிய தந்தரப் பகுதியில் வரைந்துள்ளபடி இவ்வுலகத்திலுள்ள எல்லா ராஜாக்களையும் ஜெயித்ததன் பின்னர் மேலுலகத்தில் ராஜ்ஜியம் பரிக்கும் வாஸவன் என்ற இந்திரன்மீது போர்தொடுப்பதாயினான். மஹாவிஷ்ணுவுக்குத் தம்பி முறையில் வளர்ந்துவரும் இந்திரன் அப்பெருமானிடம் தஞ்சமடையவே அவரே இந்திரலோகத்திற்குக் காவல்துணையாகத்தம்பஞ்சாயுதத்துடன் வந்து அங்கே ஒதுங்கினார்(Camped there) மகாபலி தானம் கொடுத்ததும் தம் தேஜோமயமான நீங்காத் துணைகளான ஆயுதங்களைப்பற்றி மேல்எழும்பினார். இது மூன்று உலகங்களுக்கும் பிரஜா ரக்ஷணம் தாம் வஹித்திருப்பதைக் காட்டியபடி. (2) புதிதாக இராஜ்ஜிய பாரம் வஹித்த ராஜாபத்தி உலாவித் தம் பிரஜைகளுக்குப் பலன் காட்டுகையில் பிரஜைகளின் ஆனந்தத்தை அதிலும் நூறு மடங்கு தான் மந்தஸ்மிதனாய்த் தன் திருவுள்ளஉகப்பைக்காட்டி அவர்கள் மனதைக் கவர்தல் ஸஹஜமல்லவோ? அச்சமயம் திருக்கண்களின் சேர்வை செய்ய தாமரையாகவேண்டு மல்லவோ? இப்படி விஜ்ஜிரிம்பித்து ஆகாயமார்க்கமாய்த் தம் திருவபிஷேகம் செல்லவே அங்குள்ள அமரர்கள் அப்போதே அங்குரித்த தேன் பரிமளப் வாய்ந்த துளபமாலைகளைச் சூட்டா திருந்திருப்பார்களா? வேறுஎவ்விதமாய்ப் பொருள்கொண்டாலும் அப்போதவிழ்ந்த "கொங்கலர்" துழாய்க்கு எப்படி பிரஸக்திவரும்? வானுலகமுள்ளமஹாபரிமளமுள்ள திருத்துழாய் தவிர வேறுஎது? அதை ஸமர்ப்பிக்கிறவர்கள் தேவர்களேயாக இருக்கவேண்டு மல்லவா? இத்துணையும் விஸ்தரித்த பின்னர்ஆறாயிரப்படிஉரையை எடுத்து எழுதுவோம். "உலகங்களை அளந்தருளுகிறபோது சங்கு சக்கர சாரங்காதி திவ்வியாயுதங்களையேந்திய அழகுக்கும் தம்முடைய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பற்றி உய்ந்து ஜீவிக்கவேண்டிய ஸர்வாத்மாக்களையும் கண்ட உற்சாகத்தாலும் சந்தோஷத்தாலும்புதுக்கனிந்ததிருப்பவளத்திற்கும் திருக்கண்களுக்கும் மூன்றுலகும் ஒரே நொடியில் அளந்தருளிய சிரம பரிஹாரார்த்தமாக அயர்வறு அமரர்கள் அதி பரிமள துளசி மாலைகளைக் கொண்டொப்பித்தருளின வழகுக்கும் தோற்று என்மங்கைமாமை நிறம் (அழகான காந்தியை) இழந்தா ளென்கிறாள்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
குமார் 300 போலிகள் ஏமாற்றும்.
மட. ச்யாவனப்ராசா — மட. பிருங்காமலக தைலம் — கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. மெடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
மட. ச்யாவனப்ராச. சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகை சேர்ந்த சிற்றுமனைக்கு எண்ணெய் காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக் ஸகல எவ்வித ஜ்வரங்களுக்கும்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்]

KALANILAYAM
REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

### தமிழ் இலக்கிய வகுப்பு

சென்னை எஸ்பிளனேட் Y. M. C. A. கட்டிடத்தில் ஆகஸ்ட் மாதம் 3உ வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்குப் புதிய தமிழ் வகுப்பு ஆரம்பமாகும். சேரவிரும்புகின்றவர் அன்றைய தினம் அங்குச் சந்திக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

வழுக்கை வழக்கு:—பாரீஸ் நகரத்தில் ஒரு ஓட்டலில் வேலை செய்யும் வழுக்கைத் தலையன் விளம்பரங்களைப் பார்த்துத்தன் மண்டையில் மயிர்வளர்த்திக் கொள்ளுமாறு ஒரு டாக்டரிடம் சிகிச்சைசெய்தும் வழுக்கைத் தலை எப்போதும் போலவே மிக மிருதுவாயும் பளபளப்பாயும் இருந்தது. டாக்டர் தாம் செய்த சிகிச்சைக்குப் பணம் பெறுமையால் கோர்ட்டில் தாவா போட்டார். "மயிர் வளர்கிற வரையில் டாக்டர் சிகிச்சை செய்துகொண்டிருக்கட்டும் மயிர் வளர்ந்ததும் செலவெல்லாம் தருகிறேன்" என்று எதிரி வழக்காடினன். டாக்டர் கோபமுற்று, "சிகிச்சையால் பலனிருந்தால்தான் ஊதியம் பெறுவதுஎன்பது என் கொள்கை அல்லவே. மேலும் டாக்டர்கள் எவ்வளவோ பிரயாசைப்படுகிறார்கள். பட்டும் நோயாளி இறந்துவிடுகிறானே. வைத்திய சாஸ்திரமே வீணாகிறதே" என்று வாதம் சொன்னாராம்.

"விளம்பரம் பார்த்து ஏமாந்து வீணை ஆசையை உண்டாக்கி என்னைச் சூழ்ந்த சினேகிதரும் பலரும் பரிகாசஞ் செய்வதற்கு என்னை ஆளாக்கிவிட்ட இந்த டாக்டரல்லவா டாமேஜ் கொடுக்க வேண்டும்" என்றானும் எதிரி. இந்த வழுக்கைத் தலை வழக்கு சிக்கலாயிருக்கிறதென்றும் சிக்கெடுக்கக் காலம்வேண்டுமென்றும் சொல்லி வழக்கை ஒத்திவைத்திருக்கிறாராம் நியாயாதிபதி.

**NATIONAL**
**INSURANCE COMPANY, LIMITED.**
**Head Office:**
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**

**1933 Results.**

New Business Completed exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.

All forms of life assurance policies issued at low safe rates of premium.

**Specialities.**

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
*Managers.*

**Consult**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
Head Office:—
**NATIONAL INSURANCE BUILDING,**
**362, China Bazar Rd, Esplanade, Madras.**
for Fire, Motor & Accident policies.

**A sound Company.**

Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.

OR

R. G. DAS & Co.,
*Managers.*

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.

ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ளு ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷுயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.

யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்த இன்வெஸ்ட்மெண்டும், வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.

யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னால் ஸ்தாபித்தது.

யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.

ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. } அல்லது { இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்

இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

உயர்ந்த ஜாதி
**பழமரக் கன்றுகள்**
முறைப்படி வளர்க்கப்படுவன
**பழமரங்கள் வைத்து வளர்ப்பதால் இலாபம்.**

அவை உயர்ந்த ஜாதியாயிருக்கவேண்டும். ஜாதியின் சிறப்பு அவைகளை வளர்க்கும் முறைக்குத் தக்கபடி அமையும். உங்களுக்கு வேண்டிய பழச் செடிகளை தக்க இடத்தில் வாங்கத் தயங்காதீர்கள்.

விலையும் நயம்!

ஜாதியில் உயர்ந்தது! ஒருபோதும் கெடாதது!!

தென்னிந்தியா முழுவதும் பேரெடுத்தது
தேசாயின் பழச்செடி தினுசுகளே.

உங்கள் தோட்டம் தோப்புக்களுக்கு வேண்டியவைகளை வாங்குவதற்கு முன்பு தேசாயைக் கேட்டுத் தெரிந்து வாங்குவதே நன்மையும் இலாபமும் ஆகும் என்பதைத் தீர்மானமாய் வைத்துக்கொள்ளுங்கள்.

நேரிலாயினும் கடித மூலமாயினும் எது கேட்டாலும் தெரிவிக்கத் தயாராயிருக்கிறார். தேவகோட்டை ராம்நகர் எக்ஸ்டென்ஷனில் பழத் தோட்டங்களும் அலங்கார நந்தவனங்களும் அமைத்துத்தரவும் மேற்பார்வை செய்யவும் ஏற்றுக்கொள்வார்.

D. T. தேசாய்—பழமரம் பூஞ்செடி எக்ஸ்பர்ட்.
தேசாய் அண்டு கோ.,
17, க்ராஸ் ரோட் :: மல்லேச்வரம், பங்களூர்.

**DESAI & Co.,** { 17, Cross Road, Malleswaram, BANGALORE

**இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்**
*ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்*

தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

**32** மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. **1**

இனும்! இனும்!!

"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at he B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)